1393

தமிழரசு

1393

பங்குனி
1937-

OFFICE OF ... 17 MAR 1938 MADRAS



சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு	ரூ 1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0—2—0

மாதிரி சஞ்சிகை இனாம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

விளம்பர விகிதம்

உட்பக்கம் ஒன்றுக்கு		1-மாதத்திற்கு	ரூ. 20—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	12—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	6—8—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	30—0—0
,,	4 ,,	,,	50—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
'தமிழரசு' ஆபீஸ்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

OFFICE OF THE ... 17 MAR 193 MADRAS

மலர்	தாது௵ பங்குனிமீ	இதழ்
8	1937௵ மார்ச்சுமீ 15௳	3

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள்	...	130
காங்கிரஸ் மந்திரியின் முதல் வேலை	...	138
ஐயோ! மஞ்சள் பெட்டியே உன்னை எம்பினேனே!	...	139
குட்டு வெளிப்பட்டது	...	140
கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல்	...	145
ஜானகியின் சம்பாத்தியம்	...	154
கொஞ்சநேரஞ் சென்றால்......	...	157
கமலகாந்தா	...	160
இந்தியத் தேர்தல்களின் முடிவு	...	165
சிவகாமி அல்லது தன் கற்பை காத்த காரிகை	...	169
மோட்டார் முத்தம்	...	178
'விஜயராம் அல்லது போலிச் சாமியார்'	...	180

குறிப்பு;—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

இந்திய சர்க்கார் வரவு செலவுத் திட்டம்

சென்றமாதக் கடைசியில் (பிப்ரவரி) இந்திய சர்க்கார் நிதிமெம்பர் சர். ஜேம்ஸ்கிரிக் இந்திய சர்க்காரின் 1937—38ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை ஆஜர்செய்தார். அதில் அதிசயச் செய்தியொன்றும் காணப்படவில்லை. வரிப்பளுவோ அப்படியேதானிருக்கிறது. வரிப்பளுவு குறைக்கப்பட்ட அதிசயம் ஒன்றும் அதில் இல்லாதிருந்தாலும் புதியவரி விதிக்கப்பட்டிருக்கும் புதுமை அதில் காணப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளிலும் கிராமப்புனருத்தாரண வேலைக்காக சுமார் இரண்டுகோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தன. வரும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலோ அதற்குப் பணமேதும் ஒதுக்கப்படவில்லை. முடிவடையப்போகும் ஆண்டில் அதாவது 1936-37ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தில் எச்செலவும்போக ஆறு லட்சம் ரூபாய் மீதமிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்குப் பதிலாக வரவுக்குமேல் ஒரு கோடியே தொண்ணூற்றேழுலட்சம் செலவாகிறதாம் 1936--37ல் 83 கோடியே 14 லட்சம் வருமானம் வருமென்றும், அதில் 83 கோடியே எட்டுலட்சம் செலவாகும் என்றும் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனல் இப்பொழுதோ அவ்வாண்டின் திருத்திய திட்டப்படி 81 கோடியே 36 லட்சந்தான் வருமானம் வருமாம். செலவோ 83 கோடியே 33 லட்சம் ஆகுமாம். ஆகவே நடப்புப் பொருளாதார வருஷத்தில் வரவுக்குமேல் ஒரு கோடியே தொண்ணூற்றேழுலட்சம் செலவு ஆகிறது. வரப்போகும் பொருளாதார வருடத்திலோ 79 கோடியே 99 லட்சம் வருவாய் வரும் என்றும், செலவோ 83 கோடியே 41 லட்சம் ஆகும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே வரவுக்குமேல் செலவு மூன்றுகோடியே 42 லட்சம் அதிகமாக இருக்கிறது. ஆனல் 1935—36ம் வருஷத்தில் எச்செலவும்போக ஒரு கோடியே 84 லட்சம் மீதப்பட்டிருக்கிறது. அந்த தொகையும் வருமானத்துடன் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தாலும் வரவுக்குமேல் செலவு ஒரு கோடியே 58 லட்சம் அதிகமாயிருக்கிறது. இந்திய சர்க்காருக்கு வரும் பொருளாதார வருஷத்தில் வருமானம் குறைந்து போவதற்கு புதிய அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வரப்போவதே காரணம். புதிய அரசியல் சீர்திருத்தபடி பர்மா, இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு விடப்படுகிறது. மாகாணங்கட்கு மாகாண சுயஆட்சி கொடுக்

கப்படுகிறது. அதனால் இந்திய சர்க்காரின் வருவாயில் மூன்று கோடியே 4 லட்சம் குறைந்து போயுள்ளது.

வரும் பொருளாதார வருஷத்தில் வாவுக்குமேல் அதிகமாய் செலவு ஏற்படுவதை சரிக்கட்ட, நிதிமெம்பர் புதியவரிகள் சில விதிக்கத் தீர்மானித்துள்ளார். அதாவது சர்க்கரைக்கு அந்தர் ஒன்றுக்கு ரூ. 1—5—0 ஆக இருக்கும் எதிர்வரியை இரண்டு ரூபாயாக உயர்த்தவேண்டும் என்கிறார். இதனால் சர்க்காருக்கு 115 லட்சம் ரூபாய் வருமானம் வருமாம். சர்க்கரைக்கு காப்புவரி ரூ. 7—4—0 ஆக இருக்க வேண்டுமாம்.

வெள்ளிக்குவரி அவுன்ஸ் ஒன்றுக்கு இரண்டணுவாக இருப்பதை மூன்றணுவாக உயர்த்த வேண்டுமாம்.

2½ தோலா எடையுள்ள புக்பாக்கட்டிற்கு முக்காலணு ஸ்டாம்பு ஒட்டவேண்டும் என்றிருப்பதை அரையணுவாக குறைத்துள்ளார். ஆனால் 2½ தோலாவுக்குமேல் ஒவ்வொரு 2½ தோலா எடைக்கும் அதிகப்படி காலணு ஒட்டவேண்டுமாம். இதில் தபால் இலாகாவுக்கு எட்டு லட்சம் வருமானம் குறையுமாம். ஆனால் 40 தோலா எடையுள்ள பார்சல்களுக்கு நாலணு வசூலிக்கப்படுமாம். இதில் அரசாங்கத்திற்கு எட்டு லட்சம் வருமானம் வருமாம். இவ்விதமாக பொக்கிஷமெம்பர் புதியவரிகள் விதித்து செலவைச் சரிக்கட்டி, செலவுபோக ஏழுலட்சம் மிச்சப்படுத்த திட்டம் போட்டுள்ளார்.

இப்பொழுது வாவுக்குமேல் செலவு அதிகமாய் இருப்பதை இந்த வரிகளில்லாமலே சரிக்கட்டலாம். எத்தனையோ வகைகளில் செலவைக் குறைக்கலாம். இராணுவ இலாகா ஒன்றிலேமட்டும் சிக்கனம் செய்தால் இந்த 1½ கோடியை மிக எளிதில் சரிக்கட்டி விடலாம். இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும் என்று வருடக்கணக்காய் போராடி வந்தும் இன்னும் அது குறைந்தபாடில்லை. வரும் பொருளாதார ஆண்டிலும் இராணுவச் செலவிற்கு 48 கோடியே 6 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் சுமார் ஒன்றரைக் கோடி குறைக்க முடியாதா? மற்றும் சர்க்கரை சம்பந்தமான வரிகளை பார்க்கும் அநேகருக்கு, அது ஒரு விநோதமாயும் விளங்காத புதுமையாயுமிருக்கலாம். சர்க்கரை எதிர்வரியை 1–5–0 லிருந்து இரண்டு ரூபாயாக உயர்த்தி, காப்புவரியை 7–4–0 ஆக வைத்திருப்பதால் உள்நாட்டு சர்க்கரைத் தொழில் பாதிக்கப்படும். சர்க்கரை எதிர்வரி என்பது இந்தியாவிலே உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையை ஒரு பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசத்திற்கு மாற்றுவதற்கு விதிக்கப்படும்வரி. காப்பு வரி என்பது உள்நாட்டு சர்க்கரைத் தொழில் விருத்தியடையும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சர்க்கரைக்கு விதிக்கப்படும் வரி. இறக்குமதியாகும் சர்க்

கரைக்கு இந்த காப்புவரியுடன் 1931ம் வருஷம் முதல் நூற்றுக்கு 25 வீதம் சர்சார்ஜ் என்று மற்ருெரு வரியும் விதிக்கப்பட்டது. இந்த வரியையும் சேர்த்து இறக்குமதியாகும் சர்க்கரைக்கு ஒரு அந்தர் எடைக்கு ரூ. 9—1—0 வரி வசூலிக்கப்பட்டது. இதனல் அயல் நாட்டு சர்க்கரை இந்தியாவில் அதிகமாய் இறக்குமதியாகி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையுடன் போட்டிபோட முடியாதிருந்தது. இவ்விதமிருக்கவே உள்நாட்டில் சர்க்கரை ஆலைகள் அதிகப்பட்டன. சர்க்கரைத் தொழில் விருத்தியடைந்தது. சென்னை மாகாணத்திலும் சில புதிய சர்க்கரை ஆலைகள் ஏற்பட்டுள்ளன. இப்பொழுது சர்க்கரைக்கு எதிர்வரியை உயர்த்தி இறக்குமதியாகும் சர்க்கரைக்கு விதிக்கப்பட்டுவரும் சர். ஜார்ஜ் வரியை நீக்கிவிடுவதால் இந்த ஆலைகள் பாதிக்கப்படும். வெளிநாட்டு சர்க்கரை உள்நாட்டு சர்க்கரையோடு போட்டிபோட வசதி ஏற்படுகிறது. அவ்விதம் போட்டி போட்டால் சர்க்கரை வியாபாரத்தில் லாபமில்லை என்று சில ஆலைக்காரர்கள் தங்கள் ஆலைகளை மூடிவிடக்கூடும். ஆலைகளை மூடிவிட்டால் கரும்பு பயிரிடும் விவசாயிகட்கு, அவர்களின் கரும்புக்குச் செலவேற்படாது. அதனல் அவர்களுக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும். எனவே சர்க்கரை எதிர் வரியை உயர்த்தி காப்புவரிமீது விதித்து வந்துள்ள சர். ஜார்ஜை நீக்குவதால் வியாபாரிகளும் விவசாயிகளும் பாதிக்கப்படுவதால், இந்த ஏற்பாடு நாட்டின் நன்மையை உத்தேசித்து செய்யப்பட்டதாகாது. சர்க்கரைமீது வரிவிதித்து அதிகச் செலவை சரிக்கட்ட பொக்கிஷமெம்பர் விரும்பினல் அவர் எதிர் வரியை உயர்த்தாமல் சர்ஜார்ஜ் வரியை ரத்துசெய்யாது வசூலித்து சரிக்கட்டலாம்.

வெள்ளிக்கு அவுன்ஸ் ஒன்றுக்கு இரண்டணுவாக இருக்கும் வரியை மூன்றணுவாக உயர்த்துவதும் ஒப்புகொள்ளக் கூடியதல்ல. இங்கிலாந்து தங்கத்திட்டத்தை கைவிட்டது முதல், தங்கத்தின் விலை உயர்ந்துவிட்டது. அதன் விலை உயர்ந்துவிடவே தங்க நகைகள் சாமான்களை எல்லாம் ஜனங்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு விற்க ஆரம்பித்து விட்டனர். அதனல் இதுவரை நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமான தங்கம் இந்தியாவைவிட்டு வெளியேறி விட்டது. இவ்விதம் தங்கம் ஏற்றுமதியாவதை தடுக்க வேண்டுமென்று கேட்டும், இந்திய சர்க்கார் அவ்விதம் செய்ய மறுத்து விட்டனர். இப்பொழுது வெள்ளிவரியை உயர்த்துவதினலும் வெள்ளியின் விலை அதிகமாகும். அதனல் வறுமைப்பிணிக்கு ஆளாகியிருக்கும் ஏழை இந்தியர்கள் அதையும் விற்க முன்வந்து விடுவர். எனவே இங்கிருந்து தங்கமும் வெள்ளியும் வெளிநாடுகட்குப் போய் விட்டால் நாட்டில் என்ன மீதமிருக்கும்? வெறும் லசபர்தான் மீதமிருக்கும். எனவே வெள்ளிவரியை உயர்த்துவதும் விரும்பத்தகாதது.

இனி தபால் இலாகாவை எடுத்துக் கொண்டாலோ, அதிலும் சாதாரணமக்கள் நன்மையடையக்கூடிய வசதிகள் எதுவும் இல்லை. 1914ம் ஆண்டுவரை காலணுவாக இருந்த கார்டு அரையணுவாக உயர்ந்தது. பின்னர் முக்காலணுவாக உயர்ந்தது. இன்னும் அது முக்காலணுவாகவே இருக்கிறது. அது பழையபடி எக்காலத்தில் காலணுவாக வருமோ தெரியவில்லை. ஆனால் 2½ எடையுள்ள புக்பாக்கட்டிற்கு முக்காலணு ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்றிருப்பதை அரையணுவாக குறைந்து ஏதோ நன்மை செய்தாற்போல் காட்டப்பட்டிருக்கிறது. இது வலதுகையால் கொடுத்த தானத்தை இடதுகையால் வாங்கிக் கொள்வதுபோலிருக்கிறதே யல்லாமல் வேறல்ல. ஏனென்றால் புக்பாக்டில் காலணு குறைந்து அதில்வரும் நஷ்டத்தை பார்சல்களின் கட்டணத்தை உயர்த்தி சரிக்கட்டப்பட்டிருக்கிறது. எனவே இந்திய சர்க்காரின் வரவு செலவுத் திட்டம் ஜனங்களுக்கு நன்மையளிக்கும் முறையில், வரிபளுவை நீக்கும்முறையில், நாட்டிற்கு நன்மை பயக்கும் வகையில் வகுக்கப்பட்டில்லை என்று கூறுவது மிகையாகாது. இப்படிப்பட்ட நிலைமையினால் இந்தியச் சட்டசபை சர்க்கார் கோரும் கிராண்டுகளில் சிலவற்றிற்கு எதிரிடையாக ஓட்டுச்செய்யுமானால் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

தேர்தல் முடிவும் காங்கிரசும்

அடுத்த மாதம் (ஏப்ரில்) முதல்தேதி முதற்கொண்டு புதிய அரசியல் சீர்திருத்தம் அதாவது மாகாண சுயவாட்சி அமுலுக்கு வருகிறது. அதற்காக இந்தியா முழுவதும் மாகாணச் சட்டசபைகட்கு தேர்தல் நடந்து முடிவுபெற்றுள்ளது. இதன்முடிவை பிறிதோர் இடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. மந்திரி சபை அமைக்கப்பட்டபின் கட்சிகளின் நிலைமையில் மாறுதலேற்படலாம். புதிய சீர்திருத்தப்படி சில மாகாணங்களில் மேல்சபை என்றும் கீழ் சபை என்றும் இரண்டு சபைகள் ஏற்படுகிறது. சென்னை, பம்பாய் வங்காளம், ஐக்கிய மாகாணம், பீஹார் முதலிய மாகாணங்களில் இவ்விரண்டு சபைகள் ஏற்படுகின்றன. ஏனைய ஒரிசா, சிந்து, பஞ்சாப், எல்லைப்புற மாகாணம், அசாம், மத்திய மாகாணம் முதலிய மாகாணங்களில் கீழ்சபை என்று கூறப்படும் ஒரு சட்டசபைதான் ஏற்படுகிறது. மேல்சபை கவுன்சில் என்று அழைக்கப்படும். கீழ்சபை அசெம்பிளி (ஜனப்பிரதிநிதி சபை) என்று அழைக்கப்படும். தேர்தல்களின் முடிவினால் இச்சபைகளில் கட்சிகளின் நிலைமை எவ்விதமிருக்கிறது என்பதை, அம்முடிவைப்பற்றிய செய்தியில் குறிப்பிட்டுள்ளோம். அம்முடிவின்படி ஆறு மாகாணங்களில் அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சியே பெரும்பான்மைக் கட்சியாக விருக்கிறது. எனவே நாட்டுக்கு நலம்செய்ய இப்பொழுது காங்கிரஸ் கட்சிக்கு நல்லதோர்

அரிய தருணம் கிடைத்திருக்கிறது. நாம் காங்கிரஸ் சட்டசபை புகுவதென தீர்மானித்த காலமுதற்கொண்டு, சட்டசபைபுகின் உத்தியோகம் ஏற்கவேண்டும் இல்லாவிட்டால் சட்டசபை பிரவேசத்தில் பயனேற்படாது என்று கூறிவந்துள்ளோம். தேர்தல் விளம்பரத்திலும் காங்கிரஸ் இதைப்பற்றி ஒரு திட்டமான முடிவு கூறாதிருந்ததையும் பலமாய் கண்டித்துள்ளோம். இப்பொழுது காங்கிரஸ் குழாத்தில் நடக்கும் காரியங்களையும், பிரஸ்தாபிக்கப்படும் அபிப்பிராயங்களையும் பார்க்கும்போது காங்கிரஸ் கட்டாயம் இம்மாதம் 17, 18ந் தேதிகளில் டெல்லியில் கூடும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் உத்தியோகம் ஏற்கத் தீர்மானித்துவிடும் என்று நம்புகிறோம். காங்கிரஸ் தேர்தலுக்கு முன்பே இவ்விதம் தீர்மானஞ் செய்திருக்குமாயின் இப்பொழுது அது சிறுபான்மைக்கட்சியாக இருக்கும் மாகாணங்களிலும் அதற்கு பெரும் வெற்றி கிடைத்திருக்கும் என்றே கூறுவோம். எனவே இவ்விதஞ் செய்யாதது அதன் தவறேயாகும். காங்கிரஸ் முட்டுக்கட்டை போடுவதற்காகமட்டும் உத்தியோகம் ஏற்பதென்றால், அதனாலும் பலனேற்படாது. ஏனென்றால் அந்த முறையைக் கையாண்டால் விரைவில் மந்திரிசபையை கவர்னர்கள் கலைத்துவிடுவர். பின்னர் மந்திரிசபையேயில்லாது கவர்னரே நிர்வாகம் செய்யும்படி ஏற்பட்டுவிடும். இந்த நிலைமை ஏற்படுவது காங்கிரஸின் கொள்கைக்கே முற்றிலும் மாறுபட்டதாகும். காங்கிரஸின் கொள்கை, சர்க்கார் மனம்போல் நிர்வாகத்தை நடத்தவிடாது, ஒழுங்கான முறையில் அதை நடத்தச் செய்ய வேண்டுமென்பதே. எனவே முட்டுக்கட்டை போட்டு மந்திரி சபையை கலைத்துவிடும்படியான நிலைமையை உண்டாக்கிவிடின், சர்க்கார் மனம்போல் நிர்வாகத்தை நடத்த அவர்கட்கு தங்குதடையின்றி வழிவிட்டதாகும். மற்றும் காங்கிரஸ் உத்தியோகம் ஏற்று ஏதாவது செய்தாற்றான், இதற்கு முன்னிருந்தவர்களைவிட தாங்கள் நாட்டிற்கு நன்மை செய்துள்ளோம் என்றும் காட்டமுடியும். மற்றும் காங்கிரஸ் உத்தியோகம் ஏற்கும், அதனால் தங்கட்கு நிலவரி, விவசாயக்கடன், குடிவாராப் பாக்கிக்காக சப்தி செய்தல் முதலிய தொல்லைகட்கு பரிகாரம் ஏற்படும் என்ற அபிப்பிராயம் பீஹார், ஐக்கிய மாகாணம், ஒரிசா முதலிய இடங்களிலுள்ள குடியானவர்களிடையே பரவி இருப்பதாகத் தெரிகிறது. அந்த அபிப்பிராயத்தினாலேயே அவர்கள் காங்கிரஸ்கட்சிக்கு ஓட்டுச் செய்திருப்பதாய் தெரிகிறது. எனவே காங்கிரஸ் உத்தியோகம் ஏற்காவிடில் மேற்குறிப்பிட்ட கேள்விகள் சம்பந்தமாய் அவர்கள் குடியானவர்கட்கு எவ்வித நன்மையும் செய்யமுடியாது. ஆனால் காங்கிரஸின் கொள்கையின் பயனாக அது பெரும்பான்மைக் கட்சியாக இருக்கும் மாகாணங்கள் சிலவற்றிலும், அது மந்திரி சபையை அமைப்பதற்கு சிறிது சங்கடமிருக்கிறது. புதிய அரசியல் திருத்தப்படி சட்டசபையில்

எந்தக்கட்சி பெரும்பான்மைக் கட்சியாக இருந்தாலும், மந்திரி சபையில் சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தவர்கட்கும் பிரதிநிதித்துவ மிருக்க வேண்டும். இப்பொழுது பம்பாயை எடுத்துக்கொண்டால் அங்கு காங்கிரஸ்கட்சி பெரும்பான்மைக்கட்சியாக இருப்பதால் அது மந்திரிசபை அமைக்கவேண்டும். ஆனால் அங்கு காங்கிரஸ்கட்சியில் ஒரு முஸ்லீம் கூடவில்லை. ஐக்கிய மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அங்கு இரண்டு மந்திரிகள் முஸ்லீம்களாக இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் கட்சியில் ஒரே முஸ்லீம்தான் இருக்கிறார். எனவே இப்படிப்பட்ட இடங்களில் சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தவர்கட்கும் மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் கொடுத்து காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பது சிறிது சங்கடமாகவே இருக்கும். ஆனால் இது நீங்கிக்கொள்ள முடியாத அவ்வளவு பெரிய சங்கடமல்ல. காங்கிரஸ் முட்டுக்கட்டை போடுவதற்காக மந்திரி பதவி ஏற்காது, நாம் மேலே குறிப்பிட்ட கேள்விகட்கு பரிகாரம் தேடும் நோக்கத்துடன் மந்திரி பதவி ஏற்றால், எந்த வகுப்பாரும் அதற்கு சம்மதித்து காங்கிரஸ்கட்சியில் நிச்சயமாய் சேருவர். எனவே டெல்லியில் கூடும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி குடிகளின் குறைகளை நீக்கி, நாட்டிற்கு நலஞ்செய்ய வேண்டும் என்ற ஒரே கருத்துடன் மட்டும் உத்தியோகம் ஏற்கத் தீர்மானிக்கும் என்று நம்புகிறோம். இப்படியில்லாது வேறு நோக்கத்துடன் பதவி ஏற்கத் தீர்மானித்தால், அது தேர்தல் பிரசாரத்திற்காகச் செலவிட்டபொழுதெல்லாம் அவப்பொழுதாகவே முடியும். தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அது உழைத்த உழைப்பெல்லாம வீண் உழைப்பாகவே முடியும்.

பாராட்டத் தக்கதல்ல

சமீபத்தில் சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி பதவியும் ஒரு உதவி நீதிபதி பதவியும் காலியாகிறது. இப்பொழுது பிரதம நீதிபதியாயிருக்கும் சர். ஓவன்பீஸ்லி ஜூலை 2-ந் தேதி தமது பதவியிலிருந்து விலகுகிறார். உதவி நீதிபதியாயிருக்கும் திரு. கார்னிஸ் ஆகஸ்டு 7-ந் தேதி தமது உத்தியோகத்திலிருந்து விலகுகிறார். இவர்கட்குப் பதில் பிரதம நீதிபதியாக ரெங்கூன் ஹைகோர்ட்டில் உதவி நீதிபதியாயிருக்கும் திரு. ஆல்பிரட் ஹென்ரிலீச்சையும், உதவி நீதிபதியாக லாகூர் ஹைகோர்ட்டில் வக்கீலாயிருக்கும் கான்பகதூர் சர். அப்துர் ரஹ்மானையும் சர்க்கார் நியமித்துள்ளனர். இந்த நியமனங்கள் வக்கீல்கட்கோ, அரசியல் வாதிகட்கோ, அல்லது பொதுமக்கட்கோ திருப்தியை யளிக்கப் போவதில்லை. இப்பொழுது எப்ரல் முதல் தேதியுடன் சாகஇருக்கும் சட்டப்படி ஹைகோர்ட் நீதிபதியாய் நியமிக்கப்படுபவர் இங்கிலாந்து பாரிஸ்டராகவோ அல்லது அயர்லாந்து பாரிஸ்டராகவோ அல்லது ஸ்காட்லந்து வக்கீல்கள்

சபையின் (Faculties) மெம்பாகவோ இருக்கவேண்டும். புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டத்திலோ அவ்வித நிபந்தனைகள் எதுவுமில்லை. அப்பதவியை வகிக்க அருகதையுடைய அட்வகேட்களை அதற்கு நியமிக்கலாம். பிரதம நீதிபதிபதவியோ அப்புதிய சட்டம் அமுலுக்கு வந்த பிறகே காலியாகிறது. எனவே அந்தச் சட்டப்படி இப்பதவிக்கு ஒருவரை நியமித்திருக்கலாம். அப்படியில்லாது இறக்கப்போகும் சட்டத்தின்படி, புதிய சட்டம் அமுலுக்கு வருமுன், இப்பதவிக்கு ஒருவரை நியமித்த செய்கை பாராட்டத்தக்கதல்ல. சென்னை வக்கீல்கள் சங்கமும் இதைப்பற்றி வாதித்து சென்னை அட்வகேட் ஜட்ஜாக இருக்கும் ஒருவரையோ அல்லது சென்னை அட்வகேட் ஒருவரையோ அப்பதவிக்கு நியமிக்கும்படி வேண்டித் தீர்மானமென்று நிறைவேற்றி அனுப்பியது. அதை அதிகாரிகள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை புதிய சட்டம் அமுலுக்கு வந்தபின், அதிலும் சென்னை அட்வகேட் நீதிபதி ஒருவரை, நியமிப்பதாயிருந்தால், சர்க்கார் நீதிபதி வெங்கடசுப்பாராவையே நியமிக்க வேண்டும். அவர் பல முறை ஆக்டிங் பிரதம நீதிபதியாய் வேலை பார்த்து அரசாங்கத்தின் நன்மதிப்பையும் வக்கீல்களின் நன்மதிப்பையும் ஒருங்கே பெற்றுள்ளார். எனவே இப்பொழுது புதிய சட்டம் அமுலுக்கு வருமுன் பிரதம நீதிபதி பதவிக்கு ரெங்கூனிலிருந்து ஒருவரை இறக்குமதி செய்திருப்பதற்கு, இந்தியர் ஒருவரை ஸ்திரதாப் பிரதம நீதிபதியாய் நியமிக்க சர்க்காருக்கு விருப்பமில்லை என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். உதவிநீதிபதி பதவிக்கு ஒரு முஸ்லீம் ஒருவரை நியமித்திருப்பது நியாயமானதுதான். ஆனால் வெளியூரிலிருக்கும் ஒருவரை அப்பதவிக்கு நியமித்திருப்பது விரும்பத் தக்கதல்ல. முஸ்லீம் வக்கீல்களும் முஸ்லீம்களும் இதைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொள்ளுவார்களோ நாம் அறியோம்.

தியாகி மறைந்தார்

சென்ற மாதம் (பிப்ரவரி) 18ந் தேதி மாலை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவரான டாக்டர். சி. நடேச முதலியார் தமது 62-ம் வயதில் காலஞ் சென்றார். இதை யறிந்ததும் சென்னைவாசிகள் பெரும் துயரமடைந்தனர். அவருடைய மரணம் பொதுவாக சென்னை வாசிகட்கும் ஏழைமக்கட்கும், குறிப்பாய் ஜஸ்டிஸ் கட்சிக்கும் பெரிய நஷ்டமாகும். ஏழைகள்பால் அவருக்குள்ள அன்பும் அநுதாபமும் அளவுகடந்தது. அதனால் சென்னைவாசிகள் அவரிடம் அதிகப்பற்றுக் கொண்டனர். காலஞ்சென்ற சர். பி. தியாகராயச் செட்டியாரிடத்திலும் பனகால் ராஜாவிடத்திலும் வைத்திருந்த பற்றுதலையும்விட டாக்டர் நடேச முதலியார் இடத்தில் அவர்கள் பன்மடங்கு பற்று வைத்திருந்தனர் என்று கூறுவது மிகையாகாது. சென்னைவாசிகள் அவரைப் பெரிதும் போற்றினர். தேர்தல்களில் தங்கட்கே வெற்றி

கிடைக்கும் என்ற மனோதிடங்கொண்ட காங்கிரசுங்கூட முனிசிபல் தேர்தலில் அவருக்கு எதிரிடையாக ஒருவரை அபேட்சகராக நிறுத்தப் பயந்துவிட்டதும், அவருடைய பிரேத அடக்க ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கலந்து கொண்டதுமே, அவரை சென்னை வாசிகள் பெரிதும் போற்றுகின்றனர் என்பதற்கு தகுந்த சாட்சியாகும். அவர் ஜஸ்டிஸ் கட்சிக்காக தனது உடல், பொருள், ஆவி முதலியவைகளை எல்லாம் தியாகஞ் செய்தார். காலஞ்சென்ற சர். பி. தியாகராயச் செட்டியாருக்குப் பின் ஜஸ்டிஸ் கட்சியில் தியாக புத்தியுள்ள ஒருவர் இருந்தார் என்று கூறவேண்டுமானால், அவரைத்தான் குறிப்பிடவேண்டும். திரு. சத்தியமூர்த்தி கூறியதுபோல் ஜஸ்டிஸ்கட்சி தனது பலத்தைப் பெருக்கிக்கொள்ள அவருடைய செல்வாக்கையும் பெயரையும் பயன்படுத்திக் கொண்டதேயல்லாமல், அக்கட்சியினால் அவர் எவ்வித நன்மையும் அடைந்ததாய் கூறமுடியாது. எனவே சர். கே. வி. ரெட்டி, அவர் ஜஸ்டிஸ் கட்சிக்கே உயிரைக் கொடுத்த பெரியார் என்று கூறியது முற்றிலும் பொருத்தமாகும். ஜஸ்டிஸ் கட்சியினர் அவருக்கு ஒரு மந்திரி பதவியோ அல்லது பொதுஜனங்களுக்கு ஏதாவது நன்மையான காரியஞ்செய்ய இடமிருக்கும் ஒரு பதவியையோ கொடுத்திருந்தால், அவர் ஏழை மக்கட்கு ஏதாவது செய்திருப்பார். அதனால் அந்தக் கட்சி இப்பொழுது அடைந்திருக்கும் தாழ்ந்த நிலையை அடைந்திருக்காது. அவர் பதவி எதுவும் வகிக்காது போனாலும் அவர் பொதுவாக சென்னை வாசிகட்கு அரும்பெருஞ் சேவைகள் புரிந்துள்ளார். அவர் பல வருடங்கள் தொடர்பாய் சென்னை கார்ப்பொரேஷன் அங்கத்தினராய் இருந்து தொண்டுசெய்துள்ளார். ஆரம்பக் கல்வி முன்னேற்றத்துக்கும் சமூதாயச் சீர்திருத்தங்கட்கும் பெரிதும் உழைத்துள்ளார். மற்றும் சுகாதாரப் பிரசாரப் போர்டு ஏற்பட்ட நாள் முதற்கொண்டு அதற்குற்ற தலைவராய் இருந்தும், சென்னை அரசாங்கக் கல்லூரி மாணவர்களை தேர்ந்தெடுக்கும் போர்டிலும் வைத்தியக் கல்லூரி மாணவர்களை தேர்ந்தெடுக்கும் போர்டிலும் மெம்பராக இருந்தும் கடனாற்றியுள்ளார். இப்பொழுது சென்னை அரசாங்கக் கல்லூரியிலும் வைத்தியக் கல்லூரியிலும் எல்லா வகுப்பினரும் செல்வந்தர் பிள்ளைகளும் ஏழைகள் வீட்டுப் பிள்ளைகளும் படிக்க இடம் பெற்றிருப்பதற்கு அவருடைய முயற்சியே முக்கிய காரணமாகும். மற்றும் சென்னைச் சட்டசபை அங்கத்தினராகவிருந்தும், பின்னர் சென்ற ஆண்டு முதல் அதன் உதவித் தலைவராக இருந்தும் பணி செய்துள்ளார். இப்படிப்பட்ட பெரியார் காலஞ்சென்றது சென்னையின் துரதிர்ஷ்டமே. அவருடைய ஆன்மா அமைதி பெறுவதாக!

காங்கிரஸ் மந்திரியின் முதல் வேலை

மகாத்மா காந்தியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கள்ளுக்கடை மறியல், உப்பு சத்தியாக்கிரகம் வரிகொடா இயக்கம், சீமைத்துணி பகிஷ்காரம் ஆகியவைகள் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாய் இல்லாத காலத்தில் நடத்தப்பட்டதால் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகாமல் போய்விட்டது.

1937௵ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படும் புதிய சீர்திருத்த அரசியலை அமைத்து நடத்தப்போகும் பூரண மெஜாரிட்டியைக்கொண்ட காங்கிரஸ் மந்திரிகள் ஆசனத்தி லமர்ந்தவுடன் மகாத்மா காந்தியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கள்ளுக்கடை மறியலை மீண்டும் வேறு கட்சியினர் ஆரம்பிப்பதற்கு இடந்தராமல் கள்ளுக்கடை, சாராயக்கடைகளை மூடிவிடும்படி (சின்ன காந்தியார்) பிரதம மந்திரியார் உத்திரவு போட்டுவிடுவார் என்பது நிச்சயம். ஏனெனில் இதற்குமுன் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த பிற்போக்கான ஜஸ்டிஸ்கட்சி அரசியலை நடத்தியபோது தங்கள் வசம் அதிகாரம் இல்லாத காரணத்தால் தடியடிபட்டு கள்ளுக்கடை மறியல் செய்ய வேண்டியதாய் இருந்தது. இதுசமயம் அரசாங்கமே காங்கிரஸ் கையில் வந்துவிட்டபடியால் கள்ளுக்கடை மறியல் செய்தவர்களெல்லாம் ஒரு சிரமமும் இல்லாமல் கடைகளை மூடிவிட உத்திரவு போட்டுவிடலாம். இதனை உடனே செய்யாவிட்டால் காங்கிரஸ்காரர்கள் முன்செய்த மறியலுக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். தவிர பிற்போக்கான தோல்வியடைந்துள்ள எதிரிகள் சொல்லிக்காட்டுவார்கள். அன்றியும் அவர்களே கள்ளுக்கடை மறியல் வேலையை ஆரம்பிப்பார்கள். ஆதலால் காங்கிரஸ் முதல்மந்திரியின் முதல் வேலை கள்ளுக்கடை, சாராயக்கடை, காஞ்சாக்கடை, அபின் கடை முதலானதுகளை ரத்துசெய்து விடவேண்டும். இரண்டாவது உப்பு விவசாய வரியைத் தள்ளிவிடவேண்டும். மூன்றாவது சீமைத் துணிகளை இந்தியாவிற்கு வரவொட்டாதபடி தடுத்துவிடவேண்டும். இவைகளால் பூரண சுயராச்சியம் நமக்குக் கிடைத்துவிடும்,

ஐயோ! மஞ்சள் பெட்டியே உன்னை நம்பினோமே!

நான் என்னுடைய ஓட்டை தேர்தல் காலத்தில் மஞ்சள் பெட்டியில் போட்டேன், மற்றவர்களையும் போடச் சொன்னேன், காங்கிரஸ்காரர்கள் சொல்லிக் கொடுத்தப்படி எதிர்க்கட்சிக்காரர்களிடம் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு உள்ளே போய் மஞ்சள் பெட்டியில் ஓட் போடும்படி நானும் பலருக்குச் சொல்லி, அதன்படி நடக்கச் சொன்னேன்.

இன்று நடவடிக்கையில் பத்திரிகைகளை படிக்கும்போது தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்குக் கற்றுக்கொடுத்த மோசடி வித்தையை, தலைவர்கள் வாக்காளர்களால் தேர்ந்தெடுத்தனுப்பியுள்ள அங்கத்தினர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.

திருநெல்வேலியில் கவர்னருக்கு டீபார்டி நடந்ததில் கலந்து கொண்ட காங்கிரஸ் அங்கத்தினரைக் கண்டித்து அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்ட காங்கிரஸ் தலைவர், இன்று கவர்னரோடு சமமாய் உட்கார்ந்துகொண்டு, கலந்துகொண்டு, கைகுலுக்கிக் கொண்டு, (அரசாங்கத்தை கவர்ன்மெண்டோடு ஒத்துழைத்து நடத்திக் கொடுத்துவந்த கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியைப் போலல்லாது) நாங்கள் நைசாக அரசாங்கத்தை நடத்தித் தருகிறோம் என்று சொல்லும் திரு. C. R. அறிக்கையையும் படத்தையும் கவர்னர் சபையில் பார்த்தபிறகு மஞ்சள் பெட்டியின் கதியை, தலைவிதியை வாக்காளர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது.

இப்போது வழங்கியுள்ள சீர்திருத்தத்தை கண்டிக்காத கட்சி, நபர், இந்நாட்டிலில்லை என்பது யாவரும் அறிந்ததே. அத்தகைய பயனற்ற சீர்திருத்தத்தை, நாம் வேண்டாத சீர்திருத்தத்தை பிற்போக்காளர்கள் கையில் ஒப்படைக்கக்கூடாது என்ற காரணத்தைச் சொல்லியே காங்கிரஸ்கட்சியானது தேர்தலுக்கு நின்றது.

தேர்தலில் பிரசாரம் செய்தபோது சீர்திருத்தத்தை உடைத்தெறிவோம் அரசாங்கத்தை முறியடிப்போம் முட்டுக்கட்டை போடுவோம் ராணுவச் செலவை பாதியாகக் குறைப்போம் வரியைத் தள்ளிவிடுவோம், கவர்னருக்கு 4000 ரூபாய் சம்பளம் கொடுப்

குட்டு வெளிப்பட்டது

[காரமடை S. குழந்தைசாமி]

தனவாள செட்டியார் என்பவர் ஓர் பிரபல பேங்கர். குபேர பட்டணத்திலும் அதை அடுத்த கிராமங்களிலும் அவரை அறியாதவர் ஒருவருமிருக்க முடியாது. தம்பிடிக்குத் தம்பிடிதான் வட்டிவாங்குவதே யல்லாது ஏனைய பேங்கர்களைப்போல் அரை ரூபாயோ ஒரு ரூபாயோ வாங்கும் அவ்வளவு கொடிய சிந்தையுடையவரன்று. எனவே இவரால் வீடுவாசலாகப் பெற்ற குடும்பங்கள் தான் குபேர பட்டணத்திலும் அதை அடுத்த கிராமத்திலும் நிறைந்திருக்கின்றார்களாகையால் செட்டியார்வாள் அவர்களுக்கிடையில் ஒரு 'பெரிய' மனிதராய் வாழ்வதில் ஆச்சரியமொன்று மில்லையல்லவா?

இவருடைய செல்வத்திற்குத் தக்கவாறே இவருடைய தேகமும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. சற்றேறக்குறைய ஐந்தடி உயரம். தொளதொளவென்று பெருத்து $4\frac{3}{4}$ அடி சுற்றளவுள்ள தேகம். வயிறோ மத்தளம்தான். நிறம் நெருப்பைக் குளிப்பாட்டின நன்னிறம். 'Images of god

---

போம், மந்திரிகள் 500 ரூபாய் சம்பளம் வாங்குவோம், ஐகோர்ட்டு ஜட்ஜுகளுக்கு 1000 ரூபாய் சம்பளம் கொடுப்போம், கலெக்டர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் தருவோம்; இதனை எங்கள் ஆட்சியில் முதலில் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றோம் என்று சொல்லியதை ஒருவரும் மறந்துவிட முடியாது.

முதல்முதலில் சட்டசபை ஆரம்பிப்பதற்கு முன்னமேயே அரசாங்கத்தில் முட்டுக்கட்டை போடுவது என்பது நைசாக நடத்துவது என்று அர்த்தமாகும். கவர்னரை தனது அதிகாரத்தை எங்கள் கையில் கொடுத்துவிடும்படி கேட்கின்றோம். அப்படி கொடுத்தால் நாங்கள் நைசாக கவர்னர் இஷ்டப்படி அரசாங்கத்தை நடத்தித் தருவோம் என்று சொல்வதைக் கேட்டபின் முட்டுக்கட்டையின் வியாக்கியானம் விமர்சனமாய்விட்டது.

இனி மற்ற வாக்குறுதிகளுக்கு வரும் விமர்சனத்தை கவனிப்போமாக. ஐயோ மஞ்சள் பெட்டியே உன்னை நம்பினோமே!

cut in ebony' என்று ஒரு பெரியார் கூறியது இவருக்கே பொருந்தும்.

இவருடைய நிலைமை இவ்வாறு இருப்பினும் இவர் தன் தைரியத்தைப்பற்றியும் சாமர்த்தியத்தைப்பற்றியும் அடிக்கடி பெருமையாகப் பேசிக்கொள்வார். அதிலும் முக்கியமாகத் தனது மூன்றும் மனைவி காந்திமதியிடம் தன் பராக்கிரமத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்காத நாளே இருக்காது.

தற்சமயம் நான் வாசகர்களுக்குச் சொல்லப்போகும் சம்பவம் நடக்கும்போது எங்குப் பார்த்தாலும் திருடர் பயமே அதிகமாயிருந்தது. எனவே பிரபல பேங்கராகிய தனவாள செட்டியாருக்கு திருட்டைப்பற்றிய திகில் அடிக்கடி மனதில் தோன்றி குழப்பத்தை யுண்டு பண்ணிகொண்டே வந்தது.

தனவாள செட்டியாரும் அவர் மனைவி காந்திமதியாயும் ஒரு நாளிரவு போஜனம் முடிந்ததும் திருட்டுச் சம்பவங்களைப்பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு படுக்கைக்குச் சென்றார்கள். மணி 12 இருக்கும். ஊர் அடங்கி எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அப்போது 'சிறு நீர்' கழிப்பதற்காக காந்திமதி பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள். அவ்விதம் வந்தவள் திடீரெனத் தன் கால்களுக்கு 'பிரேக்' போட்டாள். அவளுடைய கண்கள் கொல்லையி லமைக்கப்பட்டிருந்த அவரைப் பந்தரின் கீழ் நின்றுகொண்டிருந்த ஒரு உருவத்தைக் கூர்ந்து கவனித்தன. மனம் படபடவென அடித்துக் கொண்டது. கால்கள் வெலவெல எனச் சோர்வுற்றது. உடனே வீட்டுக்குள் ஓடிச்சென்று தன் கணவனை எழுப்பி மிக்க பயத்துடன் மெல்லியகுரலில் 'பார்த்தீர்களா! நம்ம அவரைப் பந்தலினடியில் ஒரு திருடன் நின்றுகொண்டிருக்கிறான்' என்றாள்.

செட்டியார் ஏற்கனவே மிக்க பீதியடைந்திருந்தாராகையால் இச்செய்தி அவரைத் தூக்கிவாரிப்போட்டது போலிருந்தது. அவருடைய கைகால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பித்தன. பயத்தால் வேர்வை குபீர்குபீரென வெளிக்கிளம்பிற்று. இத்தருணத்தில் இரும்புப் பெட்டியின் ஞாபகம் வரவே ஆத்திரத்துடனெழுந்து பெட்டியினருகிற் சென்று பார்த்தார். பெட்டி பூட்டினது பூட்டினபடியே இருந்தது. ஒருவாறு திருப்திகொண்டவராய் பின்புறக் கதவண்டைசென்று கதவிலிருந்த ஒரு சிறு துவாரத்தின் வழியாக வெளியில் பார்த்தார். 'ஆமாண்டி! அந்தப் பயல் இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருக்கான்டி' என்று முணுமுணுத்தார்.

அதற்குள் அவர் மனைவி 'என்ன? பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்! அவனை விரட்டி முடுக்குங்களேன்' என்று ஜெபித்தாள்.

'போடி! உனக்கென்ன தெரியும்? அவன் கையில் என்ன இருக்கிறதென்று பார்' என்றார்.

'ஐயோ, அதென்னமோ நீளமாயிருக்கிறதே. ஒருவேளை துப்பாக்கியாயிருக்குமோ என்னமோ' என்றாள் கதவின் துவாரத்தின் வழியாகப் பார்த்துவிட்டு.

'ஆம். துப்பாக்கிதான். ஆனல் அதற்கெல்லாம் பயப்படுபவன் நானல்ல. இருந்தாலும் ஒருவேளை சுட்டுக்கிட்டுப் போட்டானென்றால் நீ விதவையாய் விடுவாயே என்றுதான் யோசிக்கிறேன்' என்றார்.

'இல்லை, இல்லை நீங்கள் போகவேண்டாம். ராமனையாவது பொன்னனையாவது எழுப்பிவிடுங்கள்'

'ஆமாம். அதுதான் நல்லயோசனை' என்று சொல்லிக்கொண்டே முன் கொட்டகத்தில் படுத்திருந்த சேவகர்கள் இருவரையும் எழுப்பி விஷயத்தைச் சொல்லித் திருடனைத் துரத்தச்சொன்னார் செட்டியார். ஆனல் சேவகர் இருவருள் யார் முன்னால் செல்வதென்ற கேள்வி கிளம்பிற்று. 'நீ முதலில்போ, நான் பின்னால் வருகிறேன்' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர்.

'போங்கடா பேடிப்பசங்களா' என்று திட்டிக்கொண்டே உள்ளே சென்று மீண்டும் கதவின் துவாரத்தின் வழியாய் பார்த்தார். அப்போதும் திருடன் நின்றுகொண்டே இருந்தான். பார்த்தார் செட்டியார். 'அடே, இவன் எங்கேயோ பக்காத்திருடன் போலிருக்கிறது. அத்தோட்டுதான் அசையாமல் அங்கேயே இன்னும் நின்றுகொண்டிருக்கிறான். போலீஸ்காரரைப் போய்க் கூட்டிவாங்கடா' என்று சேவகரிடம் வந்து சொன்னார். சேவகர்களிருவரும் உடனேசென்று போலீஸ் ஜவான்களை அழைத்து வந்தனர். அவர்களில் தலையமுள்ளவன், 'சரி விலகுங்கள். அவனுக்கெல்லாம் பயந்து கொண்டால் நாம் உத்தியோகம் பார்ப்பதெப்படி!' என்று சொல்லி அலட்சியமாகச் சிரித்துக்கொண்டு, வேஷ்டியை நன்றாகத் தூக்கி ஓடுவதற்கு சௌகரியமாகக் கட்டிக்கொண்டு 'எங்கே திருடன்?' என்றான்.

'அதோ, அவனைப் பந்தலினடியில் நின்றுகொண்டிருக்கிறான்' என்றார் செட்டியார். கைகால் நடுங்க வாய் குழற உடனே போலீஸ்காரன் அடிமேலடி எடுத்து வைத்து நகா

ஆரம்பித்தான். 'சார்! ஜாக்கிரதையாகப் போங்கள். கையில் துப்பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறுன்' என்று மெதுவாகச் சொன்னர் செட்டியார்.

'ஆமாய்யோ! என்று சொல்லித் தயங்கினன் அப்போலீஸ்வீரன். இவனுடைய தயக்கத்தைக் கண்டு (உத்தியோக ரோதனையில்) வெட்கங்கொண்ட இன்னெரு போலீஸ்காரன், 'போங்க சார்! இதற்கெல்லாம் பயந்து கொண்டால் நாம் போலீஸ் உத்தியோகம் பார்ப்பதெப்படி? கெணத்துக்கடவு கேசைவிடவா இது?' என்று கூறிக்கொண்டே காண்கடிவேகமாயெடுத்துவைத்தான். அப்போது 'டமீர்' என்ற சத்தம் திடீரென உண்டாயிற்று அவ்வளவுதான். இரண்டாவது போலீஸ் வீரனைக் காணவில்லை. எல்லோரும் திகிலுற்றவர்களாய் திரும்பித் திரும்பிப் பார்த்தனர். அப்போது 'பக்காத் திருடனுயிருக்கிறுன் சார்!' என்ற குரல் போலீஸ் வீரர்களுக்குப் பின்னுல் இருந்து கேட்டது. திரும்பிப் பார்க்க 'கெணத்துக்கடவு' வீரர் அங்கு பதுங்கிக் கொண்டிருந்தார்.

சிறிதுநேரம் எல்லோரும் நின்றுகொண்டு வட்டமேஜை மகாநாடு கூடி யோசித்தனர். அப்போது மீண்டும் 'டமீர்' என்று ஒரு சப்தம் உண்டாயிற்று. எல்லோர் மனதிலும் 'பகீர்' என்ருயிற்று. ஆனல் நல்ல வேளையாக ஒருவருக்கும் காயம் உண்டாகவில்லை. அப்போது செட்டியார் வீட்டினுள்ளிருந்தபடியே, 'என் சார்! அவனைச் சுட்டுவிடுங்களேன்!' என்று ஜன்னல் வழியாகத் தன் யோசனையைத் தெரிவித்தார். உடனே ஒரு போலீஸ்காரன் 'ஆமாய்யா, அதுதான் சரி, அவனை விடக்கூடாது முழங்காலுக்குக் கீழ் சுடுங்கள்' என்ருன். 'நீங்கள் சுடுங்கள். எனக்குக் குறி சரியாக வராது' என்ருன். இன்னொருவன். 'விடுங்க சார்' என்று அலக்ஷியமாகச் சொல்லிக் கொண்டே தன் துப்பாக்கியை எடுத்து திருடனைக் குறிவைத்துச் சுட்டார் கெணத்துக் கடவுவீரர். குண்டு நேராகத் தலையில் பாய்ந்தது. அப்போது 'லொட லொடா' என்று சப்தம் கேட்டது. 'திருடன்' கையிலிருந்த துப்பாக்கியும் கீழே விழுந்தது'. என்ன சார்,



மண்டையோடே வெடித்து விட்டதுபோலிருக்கிறதே' என்று கூறிக் கொண்டே எல்லா போலீஸ் ஜவான்களும் திருடனிடம் நெருங்கிச் சென்று பார்த்தார்கள். களிமண் தலையும் வைக்கோல் புல்லால் செய்யப்பட்ட உடம்பையுமுடைய ஒரு பதுமை கீழேவிழுந்து கிடந்தது. 'எங்கே சார் திருடன்? இது என்னமோ பொம்மை' போலல்லவா இருக்கிறது!' என்றான் ஒரு போலீஸ்காரன். 'அடடா! அவரைப் பந்தலுக்கு திருஷ்டிக்காக வைக்கப்பட்ட பதுமையல்லவா இது. இதை இன்றுதான் ராமன்செய்து அங்கு நிறுத்தினான். அதன் கையில் 'செடியின் சமீபத்தில் வருபவர்களை இத்தடியால் அடித்து விடுவேன்' என்று சொல்வதற் குறிகுறியாக ஒரு கொம்பும் கொடுத்திருந்தான். அதைப் பார்த்து துப்பாக்கி என்று நினைத்துக் கொண்டோமே' என்றாள் காந்திமதி.

அப்போது அக்கம்பத்திலுள்ளவர்களெல்லாம் செட்டியாரைச் சூழ்ந்துகொண்டு கேலிசெய்ய ஆரம்பித்தனர். அப்போது மீண்டும் 'டமீர்' என்று சப்தம் உண்டாயிற்று. எல்லோரும் திடுக்கிட்டு சப்தம் வந்த திக்கை நோக்கினர். வானத்தில் ஒருபாணம் சென்றுகொண்டிருந்தது. 'அடடா, நம்ப ரங்கசாமி நாயுடு புதல்விக்குக் கலியாணமல்லவா! மனமக்கள் ஊர்வலம் வருகிறார்கள் போலிருக்கிறது. பாணம் விடுகிறார்கள்' என்றார் கிணத்துக் கடவுளீர். 'உம்...... இதையா துப்பாக்கி என்று நினைத்துக் கொண்டோம்' என்று வெட்கப்பட்டார் செட்டியார். இதையறிந்த அங்கு கூடியிருந்த எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். 'அந்தோ பரிதாபம்! செட்டியாருக்குண்டான அவமானத்தைச் சொல்ல முடியாது. ஒரு உயிரற்ற பதுமையால் செட்டியாரின் சாமர்த்தியமெல்லாம் வெறும் 'ஹம்பக்' ஆய்விட்டதுமன்றி அன்றுமுதல் அவருக்கு 'திருட்டுப் பேங்கர்' என்ற புனைப் பெயரும் வந்தது.

தாய்:—ஏண்டா, குழந்தை காதிடத்தில் டப்பாவைத் தட்டிக் கொண்டிருக்கிறாய்.

மகன்:—நீ தானம்மா குழந்தை எழுந்திருக்கும்போல் இருக்கிறது; போய்தட்டு என்று சொன்னாய். —R. A. பத்மநாபன்.

பிச்சைக்காரன்:—அம்மா அன்னமிச்ச தாயே

வீட்டு-பெண்மணி:—என்னடா அன்னம் கேட்க வந்தவன் தாயிலும் தாய் கேடுங்கெட்ட பிச்சத்தாயே என்று சொல்லுகிறாய்? என்று சொல்லி துரத்திவிட்டான். —வி. கே. செல்வராஜன்.

கமலாட்சி அல்லது
காரிகையின் களங்கமற்ற காதல்

[மயிலை எஸ். ஐ. நாதன்]

(நமது தொடர்கதை)

10-வது அத்தியாயம்

காமத்துக்குக் கண்ணில்லை

மெல்போனியா நகரில் எங்கும் பரபரப்பு ஏற்பட்டது. ஜனங்கள் வாய்க்கு வந்தவாறும், தங்கள் மனம் போன வாறும்நமது கமலாட்சியைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். தினசரிப் பத்திரிகைகள் விற்கும் பையன்கள் அன்றைய வெளியீட்டை கையில் வைத்துக்கொண்டு, 'கமலாட்சி மீண்டும் மறைந்தாள்' —'பேர்பெற்ற கொள்ளைக்காரன் பிடிபட்டான்' என்று கூவிக்கொண்டு தினசரியை விற்றுக்கொண்டு வந்தார்கள். பலர் அதை வாங்கிப் படித்து விஷயமறிந்தனர். வீதிகளில் ஜனங்கள் கும்பல் கும்பலாக கூடிப் பேசிக் கொண்டிருந்தனர், 'போலீஸ் கமிஷனரின் தைரியமே தைரியம்' என்று ஒருவன் சொன்னான். அதற்கு, 'அது சரிதான் அந்த குடுகுடுப்பை சாமியார் என்று சொல்லுகிறார்களே, அவர் யாராயிருக்கலாம், அவரால்தான் அக்கொள்ளைக் கூட்டத்தார் பிடிபடவும், சோமநாதனை விடுவிக்கவும் முடிந்தது' என்று வேறொருவன் கூறினான். 'ஆம்! ஆம்! அந்த குடுகுடுப்பைசாமியார் யார் என்று இன்னும் தெரிந்துகொள்ள முடிவில்லையாம். அவரும் அவரைச் சார்ந்த இரண்டொரு பேரும் மீண்டும் கமலாட்சியை கண்டு பிடிப்பதென்று சென்று அலைகிறார்களாம்' என்று மற்றொருவன் கூறினான். இவ்வாறாக ஜனங்கள் தங்கள் மனம்போனவாறு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றையதினம் கற்பகவல்லிக்கு வந்த தினசரிப் பத்திரிகையிலிருந்து லோகநாயகி பின் வருமாறு எல்லோருக்கும் வாசித்துக் காட்டினாள்.

பேர்பெற்ற கொள்ளைக்காரர்கள் பிடிபட்டனர்

கமலாட்சி மீண்டும் மறைந்தாள்

குடுகுடுப்பைச் சாமியார் யார்?

மெல்போனியா ஜூன் 10

'மெல்போனியா நகருக்கு பத்து மைல் தூரத்திலுள்ள சிறுமலைக் கோட்டையில் வசித்துக்கொண்டு வரும் கொள்ளைக்கூட்டத்தார் பிடிபட்டார்கள்.'

'வீரப்பன் என்பவனை தலைவனாகக்கொண்ட அக்கொள்ளைக் கூட்டத்தார் பல கொள்ளைகள் அடித்துக்கொண்டு மெல்போனியா நகரில் வசித்துவந்தார்கள். பிரபல குடும்பத்தில் உதித்த கற்பகவல்லியின் குமாரத்தியாகிய கமலாட்சி அம்மையை சில மாதங்களுக்குமுன் சிறைகொண்டு சென்றனர். பின்னர் இப்பெண்ணின் மாமனும், கனகவல்லியின் குமாரனுமாகிய சோமநாதரையும் சிறைகொண்டு சென்றனர். இக்கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடிக்க போலீசார் வெகு காலமாக முயற்சிசெய்து முடிவாக நேற்றையதினம், போலீஸ் கமிஷனர் தனசிங்தாசின் சாமார்த்தியத்தால் அக்கூட்டத்தா ரனைவரும் பிடிக்கப்பட்டனர்'

'கற்பகவல்லி அம்மையார், தன் மகளை கண்டு பிடிப்பார்க்கு ரூபாய் 500 கொடுப்பதாக அறிவித்திருந்தும், பலர் அக்கொள்ளைக் கூட்டத்தாருக்குப் பயந்து நடுக்க முற்றிருந்தனர். யாரோ ஒரு குடுகுடுப்பைசாமியார் தன் சாமர்த்தியத்தால் அக்கொள்ளைக் கூட்டத்தாரின் இருப்பிடத்தை அறிந்து, போலீஸ் கமிஷனரை உதவியாகக்கொண்டு அக்கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடித்து சோமநாதனைமட்டும் சிறைமீட்டார்.'

'கமலாட்சியின் தோழியான கனகசுந்தரம் கிழவி வேஷத்துடன் பாலாம்பாள் என்ற மாறுபெயருடன் அக்கொள்ளைக் கூட்டத்தாரிடம் வேலைக்கு அமர்ந்தாள். அவள் சிறைப்பட்ட கமலாட்சிக்கு செவிலித்தாயாக வைக்கப்பட்டாள். இக்கிழவி, இக்கொள்ளைக் கூட்டத்தாரை பிடிப்பதற்கு அரைமணி நேரத்துக்குமுன் மிக்க சாமர்த்தியமாய், அக்கமலாட்சியை சிறைமீட்டி வெளியனுப்பிவிட்டாள். வெளிக்கிளம்பிய அப்பெண்மணி நேராக தன் வீடு செல்லாமல் வழியில் மீண்டும் மறைந்தாள். இச்செய்தியை, அந்த குடுகுடுப்பை சாமியாரும், கனகசுந்தரமுமறிந்து மீண்டும் அவளை கண்டு பிடிக்க தேடி அலைகிறார்கள்.'

இதை முழுதும் வாசிக்கக்கேட்ட யாவரும் திகைத்தனர். அவர்களில் கற்பகவல்லி, அந்த குடுகுடுப்பை சாமியார் யாராயிருக்கலாம்? அவரது சாமர்த்தியமே சாமார்த்தியம்.' என்றாள்.

கனகவல்லி:—யாரோ இவ்வூரைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். நாம் கொடுப்பதாக கூறிய பணத்திற்காக இவர் இவ்வேலையிலிறங்கி யிருக்க வேண்டும்.

லோகநாயகி:—அவர் யாராயிருந்தால் நமக்கென்ன அம்மா! குருடனுக்கு என்ன வேண்டும்? பார்வைதானே. அதுபோல் எனது அக்காள் உயிருடன் மீண்டும் இவ்விடம் வந்தால் போதும். அது இருக்கட்டுமம்மா, இந்த தோழி கனகசுந்தரத்தின் விசுவாசத்தைப் பார்த்தீர்களா? தோழியென்றால் உண்மையான தோழி இவள் போலல்லவோ இருக்கவேண்டும்!

கனகவல்லி:—தனக்கு எவ்வளவு கஷ்டம் வருமென்பதைக் கருதாமல் கனகசுந்தரம் தன் எஜமானிக்கு உண்மையாக தக்க உதவி செய்திருக்கிறாள், அவள் இன்னும் அரைமணிநேரம் தாமதித்திருந்தால் கமலாட்சியை அவ்விடத்திலே, சோமநாதனை விடுவித்து அழைத்து வந்ததுபோல் அழைத்து வந்திருக்கலாம். என்ன செய்வது? இன்னும் நமக்கு கொஞ்சங் கஷ்டகாலமிருக்கிறது.

லோகநாயகி:—இருக்கட்டும், அந்த குடுகுடுப்பைசாமியாரும், கனகசுந்தரமும் எவ்விதத்திலாவது அக்காளை கண்டு பிடித்துக்கொண்டு வருவார்கள் என்று என்புத்தியில் நன்றாய்ப்படுகிறது; இருப்பினும் பகவானது கடாக்ஷமும் வேண்டும்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது சோமநாதன் அவ்விடம்வர லோகநாயகி அவனைக் கடைக்கண்ணால் பார்த்து புன்முறுவல் செய்துகொண்டு தன் தாயைநோக்கி, 'அம்மா! கொள்ளைக்காரர்கள் பிடிபட்ட விஷயத்தையும், அந்த குடுகுடுப்பைசாமியாருடைய செய்கையையும், விபரமாக மாமாவைச் சொல்லச் சொல்லுங்கள்' என்று கேட்டு வாய்மூடுவதற்குள் சோமநாதன் லோகநாயகியைப் பார்த்து புன்னகைகொண்டு தன்சகோதரியிடம், 'அக்கா, லோகநாயகி இவ்விஷயங்களை யறிய ஆவலாயிருக்கிறபடியால் யாவற்றையும் விபரமாக சொல்லுகிறேன்' என்று சொல்லி, ஒரு கானகத்தில் தனிமையாக சிறுகுடிசையொன்று ஏற்படுத்தி அதில் தானிருந்ததையும், பின்னர் குடுகுடுப்பை கோஷ்டியார்வந்து தன்னை விடுவித்த விபரத்தையும், முடிவாக யாவரும் அம்மலைக்கோட்டைக்குச் சென்று அக்கொள்ளைக் கூட்டத்தாரனைவரையும் கைதுசெய்த விதத்தையும், பாலாம்பாள் கிழவி என மாறுபெயருடனிருந்த கனகசுந்தரத்தின் வரலாற்றைப்பற்றியும் விபரமாக எடுத்துக் கூறினான்.

ஒருநாள் காலைநேரம், சுமார் மணி 6 இருக்கும், பனிக்காலமானபடியால் எங்கும் குளிர்ந்தகாற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. கோழி காக்கை முதலிய பறவைகள் கூவிக்கொண்டு வெளிக்கிளம்பின. கிழக்குத் திசையில் ஆதவன் உதயமாகி எங்கும் வெண்கதிர்களை பரப்பலானான். இந்நேரத்தில் பூவலம்பட்டி என்னும் இச்சிற்றூரின் ஓர் வீதியின் வழியாக சுமார் பதினெட்டு அல்லது இருபது வயது நிறைந்த ஓர் பெண்பிள்ளை நடந்து சென்றாள். அவள் இளைத்து மெலிந்து தோன்றினாலும், அவளது இயற்கை யழகுதென்னன விளங்கியது. அவளது தீரேகத்தின் ஒவ்வொரு அங்கமும் கைதேர்ந்த ஒரு சிற்பியால் கடைந்தெடுக்கப்பட்டவைகள்போல் உருண்டு திரண்டிருந்தன. அம்மடவண்ணம் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் சிறிது அழுக்குப்படிந்த ஆடையை அணிந்துகொண்டிருந்தாள். அவளது இயற்கையழகைக்கண்டு வியந்து அவ்வீதிவழியாகவரும் சுமார் 30 வயதுதென மதிப்பிடக்கூடிய ஓர் ஆடவனை இப்பெண்பிள்ளை சந்தித்து, 'ஐயா! இவ்வூரின் வண்டிமேடு எவ்விடத்திலிருக்கிறது?' என்று கேட்டாள். இதைச் செவியடுத்த அவன், 'வாருங்கள் காட்டுகிறேன்' என்றுகூறி அவளையழைத்துச் சென்று தனது வீட்டைக்காட்டி, 'அம்மா இதுதான் என்வீடு, தாங்கள் இவ்விடத்திலே தங்கியிருங்கள். இதோபோய் ஒருநொடி நேரத்துக்குள் ஓர் வண்டியொன்று அமர்த்திக்கொண்டு வருகிறேன்' என்று ரொம்பவும் வினயமாக சொல்லுவதுபோல் சொல்ல, அவள் அவ்வாறே அவ்வீட்டின் முற்றத்துக்குச் சென்றாள். அவன் உடனே அவள் பின்னால் வீட்டினுள் நுழைந்து தெருக்கதவை சாத்தித் தாளிட்டான். இதைக்கண்ட அவ்விளமங்கை பயந்து ஓவென்று அலறினாள். உடனே அவன் அவளை ஓர் அறைக்குள் தள்ளித் தாளிட்டு தெருக்கதவை பூட்டிக்கொண்டு வெளியே போய்விட்டான்.

அப்பெண்மணி இன்னது செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் அவ்விடத்திலிருந்த ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, 'ஆ! ஜெகதீசா!

ஈதென்ன கொடுமை! இப்படியும் ஒரு இளங்கன்னிகையை வதைப்பது உனக்கழகாகுமோ? நான் யாருக்கும் ஒரு கெடுதியும் செய்தறியேனே! ஒரு பாவமுமறியாத என்னை இவ்வாறு வாட்டுவது உன்னைப்போன்ற கருணாநிதிக்கடுக்குமோ? உம்! பகவானே! என்னால் இனி இத்துன்பத்தைச் சகிக்கமுடியாது. முன்புதான் நான் அக்கொள்ளைக்காரர்களிடம் அகப்பட்டு படமுடியாத கஷ்டங்களை அனுபவித்தேன். ஏதோ என்பெற்றோர்கள் செய்த புண்ணிய வசத்தால் அந்த பாலாம்பாள் கிழவியின் மூலமாய் அக்கொடிய கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பித்தேன். ஐயோ! அக்கிழவி எக்கதிக்காளானாளோ? அக்கள்வர்கள் அவளுக்கு என்ன ஆக்கினையிட்டனரோ? அக்கிழவி என்னை மீட்டி நேராக இவ்வூரையடைந்து ஓர் வண்டியொன்று அமர்த்திக்கொண்டு என் வீடுபோய் சேரும்படி சொல்லி அனுப்பினாளே, அவ்வாறே இவ்வூரையண்டி வருகையில் இப்படுபாவி என்னை இவ்விடத்தில் அடைத்துவிட்டு எங்குச் சென்றானோ? என்ன பழிசெய்ய காத்திருக்கிறானோ? யாது மறியேன்.

அந்தோ! என் பெற்றோர்கள் என்னைக் காணாது எவ்வாறு வருந்துகின்றனரோ. ஆ! என் நேசக்காதலர் என்னை நினைத்து, அல்லும் பகலும் எப்படி வாடி வதங்குகின்றனரோ: ஐயோ தெய்வமே! நான் தப்ப ஒருவழியும் புலப்படவில்லையே? நீ தயைபுரிந்தால் என்னைக் காப்பாற்றுவது ஒரு பெரிய காரியமாகுமோ? என் தலைவிதி எப்படி இருக்கிறதோ தெரியவில்லையே? ஏ! தீனதயாபரா! என்னால் இவ்வளவு துக்கங்களை சகிக்கக் கூடவில்லையே. இவ்வித கஷ்டங்களை யனுபவிப்பதைக் காட்டிலும் ஆ ஜெகதீசா! என்னை உமது திருவடிகளுக்கு அழைத்துக் கொள்ளும், அப்படி முடியாவிட்டால் நானாவது தற்கொலை புரிந்துகொள்ளுகிறேன். ஆனால், ஐயோ! அப்படிச் செய்வது மாபாதகமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றபடியால் நான் இன்னும் உயிருடனிருந்து நற்காலம் வரும்வரையில் படவேண்டியவைகளை அனுபவிக்கிறேன்,' என்று யெண்ணித் தீராத்துயாத்தில் மூழ்கி அப்படியே மூர்சித்து விழுந்தாள்.

சிறிது நேரத்துக்குப்பின், கமலாட்சியை அறையிலிட்டுப் பூட்டிச்சென்ற வாலிபனாகிய கந்தசாமி அவ்விடம்சென்று பார்க்கையில், அப்பெண்மணி தரையில் விழுந்து கிடப்பதைக்கண்டு, திடுக்கிட்டு ஒருவேளை அவள் உயிரை மாய்த்துக் கொண்டாளோவென்று திகில்கொண்டு பார்க்கையில் அவள் உயிருடனிருந்தாலும் அச்சமயம் அவளுக்கு கடுஞ்சுரம்கண்டு, கண்கள் சிவந்து முகம் ஊதி சவம்போல் வெளுத்து, அவள் உடம்பு பயங்கரமாய் விகாரமடைந்திருந்தது. கந்தசாமி இன்னது செய்வதென்று தோன்றாமல் இவளால் நமக்கு ஆபத்தாகுமென அறிந்து அவ்வீட்டைவிட்டுச் சென்றான். அவ்வீடு சுமார் 15 நாட்களாக காலியாயிருந்தது. அவ்வீட்டின் சொந்தக்காரர் இவ் ஊரையடுத்த கிராமத்திலிருந்தபடியால் கந்தசாமியிடம் வீட்டின் சாவியை கொடுத்து நல்ல குடுத்தனமாக பார்த்து வைக்குமாறு கூறியிருந்தார். இவனோ அன்று காலை இம்மடமங்கையைக்கண்டு இவளழகிலீடுபட்டு இவளை மோசடியாக அவ்வீட்டிற் கழைத்துச்சென்று பெண்டாளப் பார்த்தான். ஆனால் தெய்வமொன்று உண்டென்று அவன் உணரவில்லை போலும். கமலாட்சியை இவ்வித நிலைமையில் அவ்வீட்டில் விட்டுவந்த அன்று மாலை அவள் தன் சுயஅறிவை அடைந்ததும் எழுந்து அவ்வீட்டைச் சுற்றிப்பார்த்தாள். அவ்விடத்தில் ஒருவருமில்லை, தெருக்கதவும் திறந்திருந்தபடியால், அவள் சந்தடிசெய்யாமல்

அவ்வீட்டைவிட்டு வெளிக்கிளம்பி இன்னது செய்வதென்று தோன்ருமல் பக்கத்துத் தெருவுக்குச்சென்று அவ்விடத்தின் ஓர் மாடிவீட்டின் கதவைத் தட்டினள்.

அவ்வீட்டின் மாடியில் ஓர் ஐயர் இங்குமங்குமாக உலாவிக்கொண்டே ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். சற்றுத்தூரத்தில் பாயில் உட்கார்ந்திருந்த அவரது மனைவி அவரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தசமயம் வீட்டின் கதவு தட்டப்படவே, அவர் தன் மனைவியை உற்றுநோக்கி, 'அடி! கற்பகம்! யாரோ கதவைதட்ரா, போய் திறந்து பாரடி' என்று கூறினர். உடனே அவள் கீழ் சென்று கதவைத் திறக்கவும், கமலாட்சி அவள் எதிரில் சென்று,

'அம்மா, நானோர் ஏழை. எனக்கு இவ்விடத்தில் தெரிந்தவர்கள் எவரும்கிடையாது. இப்போது எனக்கு உடம்பு அசௌக்கியமா யிருக்கிறபடியால் தங்கள் புண்ணியத்தால் இவ்விடம் தங்கி எனக்கு கொஞ்சம் சௌக்கியமானதும் என்னூர் சென்று தங்களுக்கு செலவா னதை அனுப்பி விடுகிறேன். தங்கள் இஷ்டமறிய ஆசிக் கிறேன்' என்று கெஞ்சிக் கேட் டுக்கொண்டாள். அதற்குள் ஐயரும் அவ்விடம் வந்து நமது கமலாட்சியைக் கண்டு மனமிர ங்கி, அவ்வாறே செய்வதாக ஒப் புக்கொண்டு, தன் மனைவியை நோக்கி, 'இவளை யழைத்துக் கொண்டுபோய் காலியாயிருக்கும் அவ்வறையில் படுக்கவை, நான் போய் வைத் தியரை யழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லி அவர்களை வீட்டிற் குள் அனுப்பிவிட்டு தான் சென்று இரண்டொரு நாழிகையில் வைத்தியரை யழைத்துக்கொண்டு வந்தார்.

வைத்தியரும் கமலாட்சியை பார்வையிட்டு, 'இது ஏதோ திடீரென மனத்தாங்களாலும் கவலையாலும் ஏற்பட்டது' என்று கூறி மருந்து கொடுத்து அதை இரண்டுமணிக் கொருதரம் கொடுக்கும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவ்வாறே கற்பகம் அவளுக்கு அம்மருந்தைக் கொடுத்து நல்ல ஆகாரமும் கொடுத்து வந்தபடியால் மறுநாளே அவள் சௌக்கியமடைந்தாள். கற்பகம் நல்ல உத்தம குலத்தில் உதித்த சகலவிதமான நற்குணங்களுடைய வள். ஐயரும் கமலாட்சி விஷயமாக சிரத்தை எடுத்துக்கொண்ட படியால், கமலாட்சி பூரண சௌக்கியமடைந்து இயற்கையழகுடன் விளங்கினள். இரண்டொரு நாட்களுக்குப்பின்னர் கற்பகத்தின் தாயார் அதிக வியாதியாக இருப்பதாக ஐயருக்கு கடிதம்வர, அவர் தன் மனைவியைநோக்கி. 'அடி கற்பகம்! நீ சென்று பார்த்துவிட்டு வா, அதுவரைக்கும் கமலாட்சியை சமை

யல் வேலையை கவனித்துக் கொள்ளும்படிச் சொல்' என்று சொல்ல அவன் அவ்வாறே கமலாட்சியைக் கேட்டதற்கு, அவள் 'அம்மா தாங்கள் என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்கு, தங்கள் குடும்பத்துக்கு நான் உதவி செய்யாவிட்டால், இவ்வுயிரிருந்துதான் என்னபயன்? ஆகவே, தாயே தாங்கள் சந்தோஷமாகச்சென்று தாயாரைப் பார்த்துவிட்டு வாருங்கள். அவர்களுக்கு ஒன்றும் ஆபத்து நேரிடாது' என்று இனிமையான குரலுடன் மிக தாழ்மையாக விடையளித்தாள். அவ்வாறே அன்று இரவு கற்பகம் புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

கமலாட்சி அவ்வையருக்கு சமையல்செய்து போட்டுக்கொண்டிருக்கும் ஒருநாள் அவர் அவ்விளமங்கையின் பேரழகைக் கண்டு வியந்தார். சிற்சில சமயங்களில் அப்பெண்மணியின்மீது காதல் கொள்வார். கற்பகம் வந்ததும் அவளிடம் விடைப்பெற்றுக்கொண்டு அவர்கள் உதவியினால் தன்னூராகிய மெல்போனியா நகரை யடையலாமென கமலாட்சி நினைத்துக் கொண்டு சிறிது சந்தோஷத்தோடே அவ்விடத்தில் காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தாள். அப்போது அவள் தன் இயற்கையழகுடன் விளங்கினாள். மைதீட்டிய மான்விழியுடனும் வலம்புரி போன்ற கழுத்துடனும் மின்னற் கொடிபோன்ற இடையையுடனும், அன்ன நடையுடனும், மயிலின் சாயலுடனும் மிக அழகுடன் விளங்கினாள். மறுநாள் வெள்ளிக்கிழமை தினம் அவள் ஸ்நானம் செய்துவிட்டு வெண்மையான பட்டாடையுடுத்திக்கொண்டு, கருமேகத்தைப் பழிக்கச்செய்யும் அவளது பளபளப்பான மிருதுவான முழங்கால் வரையில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்த கூந்தலை சிக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் மார்க்கச்சு அணியாமலிருந்ததினால் பச்சை மூங்கிலைப் போல் வழுவழுப்பாய் விளங்கும் அவளது தோள்பட்டையும், புஜமும், சூரியனின் ஒளி பட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவை தவமுனிவர்களின் மனத்தையும் கலக்கும்படியான விதமாயிருந்த தென்றால் நமது ஐயரைப்பற்றி என்ன சொல்லுவது? அவர் முடிவாக அவள்மீது காதல் கொண்டுவிட்டார். தனது மனைவி கற்பகம் வருவதற்கு முன் அவளிடம் இவ்விஷயத்தைச் சொல்லி அவளை தனது காதலியாக வைத்துக்கொள்ளலாமென தனது மூடமதியால் உறுதி செய்துகொண்டார். அன்றையதினம் இரவு போஜனம் முடிந்ததும், கமலாட்சி தனது படுக்கையறைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் ஐயர் மனம் நாலாவிதத்திலும் அலக்கழித்தது. முடிவாக அவர் கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு,

கமலாட்சியைக் கூப்பிட்டார். அவள் அவ்வாறே அவ்விடம் வந்து அங்கோர் விடத்தில் நின்றுகொண்டு தனது கால் பெருவிரலைப் பார்த்துக்கொண்டு, 'ஏன் என்னைக் கூப்பிட்டீர்கள்!' என்று கேட்டாள். அதற்கு ஐயர், 'கமலாட்சி இன்று சாப்பாடு வெகு ருசியாயிருந்தது' என்று சொல்ல அதற்கு கமலாட்சி யாதொன்றும் பதில் கூறாமல் அவ்விடத்திலே நிற்பதைக்கண்ட ஐயர் 'கமலாட்சி, என்ன ஒன்றும் பதில் சொல்லாமலிருக்கிறாய்; என்னிடம் உனக்கு அன்பு இல்லை ஏ!' என்று கேட்க அதற்கும் கமலாட்சி ஒன்றும் பதில் சொல்லாமல், தனக்குள் 'ஏதேது ஐயர் என்மீது ஒருவித கண்ணோக்கமாக யிருக்கிறார் போலிருக்கிறது. அதனால்தான் அவர் சாப்பிடும்போது என்னிடம் வெகு தாராளமாக பேசிக்கொண்டிருந்தார்போல் தெரிகிறது' என்று யோசித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு அகலாமலிருந்தாள். மீண்டும் ஐயர் கமலாட்சியைப் பார்த்து புன்னகை செய்துகொண்டு, 'கண்மணி கமலா! என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் இப்படி மௌனமாயிருப்பது எனக்கு கஷ்டமாக இருக்கிறது. உனக்கென்ன வெட்கமாகவா இருக்கிறது; இவ்விடத்தில் என்னையும் உன்னையும் தவிர வேறு ஒருவரும் கிடையாது. ஆகவே தாராளமாக என்னிடம் கொஞ்சிப் பேசி விளையாடாமல் ஏன் அப்படி நின்று கொண்டிருக்கிறாய்!' என்று ஆசையோடு சொன்னார். இவைகளை யெல்லாம் செவிமடுத்த அம்மங்கை இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து தனக்குள், 'இனிமேல் யாதொரு ஆபத்தில்லாமல் ஊர்போய் சேரலாமென கருதியிருந்த எனக்கு இவ்வித ஆபத்து நேரிடுமென்று கனவிலும் நினைக்கவில்லையே. ஆ! ஜெகதீசா! இதுவும் உன் திருவிளையாடலோ' என்று கருதிக்கொண்டு முகம் வெளுத்து அசைவற்று நின்றுவிட்டாள். மறுபடியும் அவ்வையர் கமலாட்சியை நோக்கி 'கண்மணி! இன்னுமா தாமதம் செய்கிறாய்! ஓடிவந்து உனது மிருதுவான கரத்தால் என்னை ஆசையோடு கட்டிப்பிடித்து முத்தந்தர மாட்டாயா? அல்லது நானாவது வந்து உன்னை இறுகச் சேர்த்துப் பிடித்தணைத்துக்கொண்டு உனது சிவந்த கன்னத்தில் ஆசைதீர முத்தந்தரட்டுமா? என்ன சொல்லுகிறாய் கண்ணே!' என்று மீண்டும் ஆசையோடு கேட்டார். இதைக் கேட்டதும் கமலாட்சி மிகப் பயந்து மெய்சிலிர்த்து அங்க முழுதும் வேர்வை பெருகி ஓட, அவள் அவரைப் பார்த்து கண்ணீர்விட்டுக்கொண்டு 'ஐயா தாங்கள் தக்க சமயத்தில் எனக்கு உதவிசெய்து முடிவாக இவ்வித மானக்கேடான விஷயத்தில் பிரவேசிக்க, உங்கள் உத்தமான குணம் எங்கு ஓடி ஒளிந்தது? வேண்டாம் ஐயா, கருதிய எண்ணத்தை விட்டொழியுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். இவற்றை செவியேற்காது ஐயர், 'கமலா! நீ கற்புடையவளாயும், சாதுவாயுமிருந்தாலும் உன்மீது எனக்குள்ள காதலும் வாஞ்சையும் என்னைவிட்டு அகலவில்லை. நீ என்ன கூறினாலும் நாமிருவரும் இனிமையாக முத்தமிட்டுக் கொள்ளாமலிருக்க முடியாது' என்று கூறி எழுந்தார். அதற்குள் கமலாட்சி பதறி, 'ஐயா, உமக்கென்ன பைத்தியமா பிடித்து விட்டது? அழகான உம் மனைவியை வைத்துக்கொண்டு இப்படி முரட்டுத் தனமாக என்னிடம் வாதாட வேண்டாம். சற்று யோசித்துப் பார்த்து என் மேல் தயவு வைக்கவேண்டும்' என்று கூறினாள். அவள் கூறிய ஒரு வார்த்தையும் அவரது செவியில் விழவில்லை. 'காமத்துக்குக் கண்ணில்லை' என்பதுபோல் அவர் முடிவாக, 'முடியாதென்றால் யார் விட்டது' என்று கூறிக்கொண்டு

எழுந்து கமலாட்சியை பலாத்காரம் செய்யும் எண்ணத்துடன் காமவிகாரங் கொண்டவராய் அவளை நோக்கி வந்தார். அப்போது கமலாட்சி பதைபதைத்து, 'ஐயோ! நான் என்ன செய்வேன், நாவைப் பிடுங்கிக்கொண்டு என் உயிரை விட்டாலும் விடுவேனன்றி என் உயிர் இருக்கும்வரையில் இந்த சரீரம் உன் வசப்படாது' என்று கூச்சலிட்டாள். அதற்கும் அந்த மானங்கெட்ட பிராமணர் மோகப்பித்துப் பிடித்து 'கமலா! எங்கே, நாவைப் பிடுங்கிக்கொள் பார்க்கலாம். ஏன் வீணாக பிரமாதம் செய்து கொள்ளுகிறாய்? அப்படி உனக்கு கூச்சமாயிருந்தால் கண்களை மூடிக்கொள், நானாகவே வந்து உன்னை இறுகச்சேர்த்துப் பிடித்துக் கொள்ளுகிறேன்' என்று கூறி பின்னும் மோக வேசத்தால் அவளை நேக்கி நடந்தார். அப்போது கமலாட்சி பெரிதும் சீற்றமும் ஆத்திரமுங்கொண்டு நாலாதிசைகளிலும் பார்வையைச் செலுத்தினாள். அப்போது அவளுடைய கூரிய விழிகள் எதிரிலிருந்த மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த கத்தியை நாடிச் சென்றது. கண்ணிமைப் பொழுதில் அவள் அதை கையிலெடுத்துக்கொண்டு தனது மார்பிற்கு நேராக பிடித்துக்கொண்டு, 'கடவுள் எங்குமிருந்து யாவற்றையுமறிந்து தருணத்தில் அனாதைகளை இரட்சிக்காவிடில் இவ்வுலகு ஒழுங்கில் நிற்குமா? நீர் என் சரீரத்தை தீண்டுவீராகில் இக்கத்தியால் என் மார்பில் குத்திக்கொள்ளுவேன். அப்புறம் நீர் என்னைக் காப்பாற்ற எண்ணினாலும் முடியாது. ஸ்திரிஹத்தியும்மை ஏழேழுதலை முறைக்கும்விடாது' என்று ஆத்திரத்தோடு கூறினாள். இந்த விபரீதச் செய்கையைக் கண்ட அவர் பெருந்திகில் கொண்டவராய் அவளை நோக்கி, ஏ! பெண்ணே, வேண்டாம். அப்படிச் செய்யாதே நிறுத்து, இனி உன்னைத் துன்புறுத்துவதில்லை. உன் இஷ்டம்போல் நடந்துகொள். நான் இதோ போய்விடுகிறேன். பெண்மணி, உன்னை நான் சாதாரணப் பெண்ணாக மதித்து, அறிவில்லாதவனாய் தகாத காரியம் செய்யத் துணிந்துவிட்டேன். மன்னித்துக்கொள்' என்று கூறிக்கொண்டு மாடிக்குச் சென்றார். அப்போதுதான் கமலாட்சிக்கு மூச்சு ஒழுங்காய்வரத் தலைப்பட்டது. அவள் அப்படியே அசைவற்று சுவரின்மீது சாய்ந்துகொண்டு அவன் இனி நம்மை துன்புறுத்தாமலிருப்பதாக கூறியது ஒருவேளை வஞ்சகமாக இருக்குமோவென்று ஐயமுற்றாள். இருப்பினும் எச்சரிக்கையாகவே யிருக்கவேண்டும் என்று உறுதிகொண்டு மேல் மாடிக்குச் செல்லும் வாயிற்படியின் கதவை சாற்றித் தாளிட்டுவிட்டாள். இனி தான் அவன் முகத்தில் விழித்தால் தன்னிலும் கேவலமான இழிவான பாத்தை ஒருத்தியுமிருக்க மாட்டாளென்று மதித்தாள். 'பொழுதுவிடியுமுன் இவ்விடத்தைவிட்டு வெளியிற் போய்விட வேண்டும். எந்த விடத்திற்கு போகிறது? சாவித்திரி, சந்திரமதி, தமயந்தி முதலிய செய்வமாதுகள் இப்பூதேவியின் வயிற்றில் தோன்றி இப்பூவுலகில் எழ்மையும் தாழ்மையும் அடைந்து துன்பங்கள் அனுபவித்திருக்கும்போது நான் இவைகளை அனுபவிப்பது ஒரு பெரிய காரியமல்ல. இவ்விடத்திலிருந்துகொண்டு இப்பாதகன் முகத்தில் விழிப்பதைக் காட்டிலும் நாம் மீண்டும் கானகம் சென்று வாழ்வதே நலம்' என உறுதி செய்துகொண்டு அந்நள்ளிரவில் தனிமையாக அவ்வீட்டைவிட்டு சென்று அருகிலுள்ள கானகத்தை 'தெய்வமே நீயே கதி' என்று கருதி நாடிச் சென்றாள். வழியில் காதகர் எற்பட்டு தனது கற்புக்கு பங்கம் ஏற்படலாம் என்று எண்ணி அதிலிருந்து தப்புவதற்காக பாலாம்பாள் இழவி கொடுத்த

அந்த காய்ந்த இலையை சாப்பிட்டாள். 'நமது வினைப்படி முடியட்டும்' என்று கருதி அந்த காய்ந்த இலையை சாப்பிட்டவுடனே அவள் சுமார் 60 வயதுடைய கிழவி போலாகி விட்டாள். பின்னர் தைரியமாக அச்சிறு கானகத்தை சுற்றித் திரிந்துகொண்டு அவ்விடத்தில் கிடைக்கும் காய் கனிகளைத் தின்றுகொண்டு இருந்தாள். (தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமாராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

ஜானகியின் சம்பாத்தியம்

['குமாரன்']

வேலு தன் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அப்போது மணி 5-30 'ஜானு! ஜானு!' என்று அழைத்தான். பதிலில்லை. திண்ணையின் ஒரு புறத்தில் படுத்திருந்த மணி (நாய்)மட்டும் அவன் குரலைக் கேட்டதே எழுந்து வாலை ஆட்டிற்று.

வழக்கமாய்த் தன் வரவை எதிர்பார்த்து வாயிற்படியில் நின்றிருக்கும் ஜானகியை இன்று காணாதது அவனுக்கு வியப்பாயிருந்தது. உள்ளே ஓடி எங்கும் பார்த்தான். அவள் காணப்படவில்லை. 'எங்கே போயிருப்பாள்? தன் சினேகிதி வீட்டிற்குப் போயிருப்பாளோ? அவளுக்குத்தான் பழக்கமான பெண்கள் யாரும் கிடையாதே!' இவ்வாறு அவன் உள்ளம் எண்ணத் தொடங்கியது.

ஜானகி தன் பெயருக்கேற்ப நல்ல அழகி. அவள் மேனியில் அழகின் மெருகு நெளிந்து கொண்டிருந்தது. வேலனுக்கு அவள் வாழ்க்கைப்பட்டு இரண்டு ஆண்டுகளாகின்றன. அன்பின் இன்ப ஊற்றிலே மிதந்துகொண்டிருந்த அவ்விருவரும் இதுவரை ஒரு தினமும் ஒருவரை விட்டொருவர் பிரிந்ததில்லை.

உத்தியோகந்தேடி வேலு எங்கெங்கேயோ அலைந்து திரிந்தான். பயனில்லை. ஆகவே அவன் கடைசியாக ஒரு அச்சாபீஸில் பத்து ரூபாய் சம்பளத்திற்கமர்ந்தான். செலவினங்களில் அவன் தன் ஆசை மனைவி ஜானகியின் முகங்கோணாதவாறு நடந்து கொள்ளவேண்டி யிருக்கிறது. தன் சகதர்மிணியின் முகம் வாட யாருக்குத்தான மனம்வரும்? ஜானகி தன் பிறந்தகத்திலிருந்து கொண்டுவந்த சொத்து சிறிதளவு சங்கீத ஞானமே. அதைப் பெருக்கிக் கொள்ள அவள் தன் புருஷனது கையைப் பார்த்ததில் வியப்பொன்றுமில்லையல்லவா? அந்த நிலையில் வேலு தன் குடும்ப பாரத்தைச் சுமக்க மிகவும் திணறினான். இதை அவள் உணராமலில்லை. ஆனாலும் அவளால் செலவினங்களை மட்டுப்படுத்த முடியவில்லை.

மணி எட்டும் ஆயிற்று. ஜானகி வந்தபாடில்லை. வேலுவின் உள்ளத்தில் நூற்றுக்கணக்கான எண்ணங்கள் ஓடிக்கொண்

டிருந்தன. எண்ணாத வெண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணானான். அன்றைய இரவு அவனது விசனத்தில் நீண்டு கிடந்தது.

மறுநாட்காலையில் வேலு போலீஸ் ஸ்டேஷனை யடைந்தான். தன் பார்யாள் காணாமற் போனதைப் போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து அவளைக் கண்டுபிடிக்கும்படி வேண்டினான். அவரும் அவனுக்குத் தன்னாலான உதவிசெய்வதாக வாக்களித்தார்.

வேலு ஆபீசுக்கே போகவில்லை. ஒரு வாரத்திற்கு லீவு எடுத்துக்கொண்டான். சோகமே உருவமாக வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தான். அவனது மணியும் அவனைவிட்டு நகரவில்லை.

இரண்டு தினங்கள் ஓடிமறைந்தன. வேலுவின் கவலை வலுத்தது. தான் இனி ஜானகியைக் காணவே போவதில்லை என ஏங்கித் தவித்தான். அவளது உத்தம குணங்கள்மீதும் அவனுக்குச் சந்தேகம் உதிக்கலாயிற்று. 'ஆ! பாதகி! இப்படி என்னை மோசம் செய்வாயா?' என்பான். மறுநிமிஷம் அவளது காதல் கனிந்த பார்வையும், பேச்சும் அவன் நினைவிற் கோடிவரும். அப்போது அவளை யாரோதான் வஞ்சித்துக் கொண்டுபோயிருக்கவேண்டும் என்று கருதுவான். 'ஐயோ! ஜானு! என் கண்ணே! என்று உன் திருமுகம் காண்பேன்? எப்போதுன் கனிமொழி கேட்டின்புறுவேன்?' எனறேங்கி அழுவான். இவ்வாறாக அவன் பைத்தியங் கொண்டவனைப் போல பிதற்றலானான்.

ஒரு வாரஞ் சென்றது. போலீஸிலிருந்து அவனுக்கு ஒரு தபால் வந்தது. ஜானகியை அவர்கள் தேடிக்கொண்டிருப்பதாக அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. வீட்டிலேயே அடைந்துகொண்டிருந்த வேலனுக்குக் கொஞ்சம் வெளியிற் போய்வர விருப்பமுண்டாயிற்று. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டருடைய வீட்டை நோக்கிக் கிளம்பினான். கூடவே மணியும் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு சென்றது.

அப்போது இன்ஸ்பெக்டர் தன் அறையில் கிராமபோன் சங்கீதம் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது வைக்கப்பட்ட பிளேட்டுகளெல்லாம் சமீபத்தில் வெளிவந்தவை. அவற்றில் ஒன்றைவைத்து இன்ஸ்பெக்டர் சாவி கொடுத்த பிறகு ஒரு இனிய பாட்டு ஆரம்பமாயிற்று. உடனே மணி எழுந்துநின்று போனைப் பார்த்தவண்ணம் குரைக்கத் தொடங்கியது. வேலு என்ன சொல்லியும் அது கேட்கவில்லை. கிராமபோனை நோக்கி அது பாய முயன்றது. அந்தப் பாட்டு முடிந்ததே மணியும் அடங்கிற்று. அடுத்த பிளேட்டுகள் வைத்தபோதெல்லாம் அது அமைதியுடன் படுத்திருந்தது. அதுகண்ட சப்இன்ஸ்பெக்டர் வியப்புற்று மீண்டும்

மீண்டும் அந்த இன்னிசை பிளேட்டையே வைக்கலானர். அப்போதெல்லாம் மணி குரைத்ததைத யாராலும் தடுக்க முடியவில்லை. அவருக்கும் வேலுவுக்கும் சந்தேகம் வலுத்தது. அந்தப் பிளேட்டைப் பார்த்தபோது அதில் ஒரு பெண்மணி பாடியது என்று மட்டு மிருக்கக் கண்டார்கள். உடனே இன்ஸ்பெக்டர் டெலிபோனண்டை சென்று கொலம்பியா கம்பெனி மானேஜருடன் பேசலானர். அந்தப் பெண்மணியின் பெயர் தெரியாதென்றும், அன்று காலையில் அவள் தன் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டாளென்றும் பதில் வந்தது.

வேலு தன் நாயுடன் வீடு திரும்பினன். கவலையும், குழப்பமும் இன்னும் அவன் உள்ளத்தைவிட் டகலவில்லை.

மாலை 4 மணி. வீட்டினுள் வேலு கட்டிலில் படுத்தவண்ணம் ஏதோ முணங்கிக்கொண்டிருந்தான். திடீரென மணி குரைக்கும் ஓசை கேட்டது. வரவர அந்த ஓசை வலுத்தது. உடனே வெளியே ஓடி வந்தான். என்ன ஆச்சரியம்! வாசலில் வந்து நின்ற வண்டியிலிருந்து ஜானகி இறங்கினள். மணி அவள் உடைகளைப்பற்றி இழுத்தது. வண்டிக்காரன் பெட்டி, மூட்டை முதலியவற்றை எடுத்துக்கொண்டு வந்து வைத்தான்.

'என்ன தைரியம் உனக்கு, இப்படி வீட்டைவிட்டுப் போய்வர?' என்று கேட்பதுபோலிருந்தது வேலுவின் பார்வை. அவனுற் பேச முடியவில்லை.

'என்ன இப்படிப் பார்க்கிறீர்களே! இந்தாருங்கள் நீங்கள் என் சங்கீதத்திற்காகச் செலவழித்த பணமும் அதன் வட்டியும்.........' என்று கூறி அவன் கையில் தன்னிடமிருந்த மணிபாக்ஸைக் கொடுத்தாள். அதைத் திறந்துபார்த்தபோது அவனல் தன் கண்களை நம்ப முடியவில்லை. ஏனெனில் முழுசு முழுசாக அதில் பத்து நூறு ரூபாய் நோட்டுகளிருந்தன. உள்ளத்துவகை பொங்க அப்படியே அவளைக் கட்டித் தழுவினன்.

உபாத்தியாயர்:—ராமு வனந்தரம் என்பது யாது?

ராமு:—யாதொன்றும் வளராத ஒரு பிரதேசம்.

உபாத்:—ஓர் உதாரணம் சொல் பார்க்கலாம்.

ராமு:—என் பாட்டனர் மண்டை.

—செல்வராஜ்

கொஞ்சநேரஞ் சென்றால்......

[கனகன்]

குப்பு சாஸ்திரிகள் தம்பதிசமேதராய் ஒரு டஜன் குழந்தைகளோடும் அரைடஜன் மூட்டை முடிச்சுகளோடும் தனது குக்கிராமத்தைவிட்டு பட்டணம்போக ரயிலடிக்குவந்து சேருகிறார். ரயில் 10—30 மணிக்குப் புறப்படுகிறது. ஆனால் இவர் 10—30க்கு வீட்டிலிருந்து கிளம்பி வேகமாக ஸ்டேஷனுக்கு வரவே ரயிலும் போய்விடுகிறது. 'அடடா! தவறிட்டுதே! கொஞ்சநேரஞ் சென்றுவந்தால்......' என்று தம் மனைவியிடம் தம் கோபதாபத்தைச் செலுத்துகிறார்.

ஆபீஸுக்கு 10 மணிக்குப் போகவேண்டும். ஆனால் சங்கரபாணி நாயுடுவுக்கு ஊரிலிருந்து பந்துக்கள் வந்திருப்பதால் அவர்களை உபசரிப்பதில் நேரமும் நோட்டீஸ் கொடாமல்போய்விடுகிறது. கடைசியில் கடிகாரம் 10 அடித்தவுடனே ஆபீஸை நோக்கி வெகு வேகமாய்ப்போகிறார். பத்து நிமிஷம் லேட்டு என்று மானேஜர் துரை அவரைஏறஇறங்கப் பார்க்கிறார்.



கொஞ்சநேரஞ் சென்று வந்தால் இப்படித்தான் என்று முணுமுணுத்துக்கொள்கிறார் நாயுடு.

டாக்கீஸ் 10½க்கு ஆரம்பிக்கிறது. வேணு தன் மனைவியையும் அழைத்துப்போக எண்ணுகிருன். ஆனல் மனைவி சிங்காரிப்பதில் கொஞ்சங் காலதாமதமாகிறது. சரியாக10—30க்குக் கொட்டகைக்குப்போய் டிக்கட் இல்லாமல் திரும்புகிருர்கள் இருவரும்.

பால்காரன் வாராததால் பாலில்லாமல் காப்பி சாப்பிட்டுவிட்டு வெளியே புறப்படுஞ் சமயம் பால்காரன் வந்து தட்டுகிருன். ஏனப்பா இவ்வளவு நேரம்? என்று சங்கரன் கேட்க 'எஜமானுங்க மாடு இன்ணிக்கு வழியா வரல்லிங்க' என்று பல்லை இளிக்கிருன் பால்காரன். கொஞ்சநேரம் சென்றுவிட்டால் இப்படித்தான் என்று சங்கரனும் பச்சைப்பாலை பரிதாபத்தோடு நோக்குகிருன்.

மணி, கிட்டுவுக்கு ஒரு அவசரமான கடிதம் எழுதவேண்டும். அடுத்தநாள் போய்ச்சேரவேண்டும். 10¼மணிக்குப் போஸ்டில் போக வேண்டியது. அவசரம் அவசரமாக முடிந்தும் முடியாமலுமாய்க் கடிதத்தை எடுத்து போஸ்ட்பண்ண வீதிக்குப் போகும்போது மணி 10—15 என்று எடுத்துக் காட்டுகிறது எதிர்வீட்டுக் கடிகாரம். 'அடடா! கொஞ்சநேரஞ் சென்றுவிட்டதே' என்று வருந்துகிருன் மணி. எனவே எந்தக் காரியத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் தவருது செய்தலே உத்தமம். இல்லையேல் இப்படித்தான் மனத்துயரடைய வேண்டிவரும். இது கண்கூடாக எல்லோரும் பார்க்கும் அநுபவம்.

மனைவி:—நமது சின்ன பையன் மைக்கூட்டிலிருந்த இங்கியை குடித்துவிட்டானே! ஐயோ, நான் என்ன செய்வேன்?

கணவன்:—இங்கி யில்லாமற் போனல் பென்சிலைக்கொண்டு எழுதலாமே.

* * *

அண்ணன்:—அடே ராமு! அங்கு என்ன செய்கிருய்?

தம்பி:—சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

அண்ணன்:—ஒரு நாளைக்கு எத்தனை வேளை சாப்பிடுகிறது.

தம்பி:—யோகிக்கு ஒரு வேளை; போகிக்கு இரண்டு வேளை; ரோகிக்கு மூன்று வேளை. என்னைப் போன்றவர்களுக்கு நாலு வேளை. ஆகவே நாலு வேளை சாப்பிடுகிறேன்.

* * *

மனைவி:—(புருஷனை நோக்கி) நான் சீக்கிரம் ஒரு புதுப்புடவை கட்டுவேன் என்று ஒரு ஜோதிடன் சொன்னன்.

கணவன்:—ஆ! பார்த்தனையா, நான் சொன்னது சரியா யிருக்கிறது. இந்த சாஸ்திரக்காரர்கள் ஒருபோதும் உண்மை சொல்ல மாட்டார்கள். நான் உனக்கு புடவை வாங்கிக் கொடுக்கக் கூடாதென்று தீர்மானித்து விட்டேன்.

—செல்வராஜ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

அநுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அநுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலா மென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழைய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு.

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அநுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

அத்தியாயம் 24.

உயில் சாசனம்

சில ஆண்டுகட்கு முன்பு, பாரத நாட்டிலுள்ள மங்களபுரி என்ற மாநகரிலிருந்து எனது மனைவி அபாயம்பிகையின்பேரில் ஏற்பட்ட அருவருப்பால் இங்குவந்த தனபால முதலியாராகிய யான் பூர்ண ஞாபகசக்தியுடனும் நல்லறிவுடனும் எழுதிவைத்த உயில்சாசனம் என்னவென்றால் :

கஷ்டார்ஜிதமாய் நான் சம்பாதித்த கீழ்கண்ட சொத்துக்களை கீழ்க்கண்டவிதம் வினியோகம்செய்ய நிச்சயித்து இவ்வுயில் எழுதலானேன்.

இந்த ஜர்மனி நகரில் ஜார்ஜ் ஹோட்டலுக்கருகிலுள்ள சிறிய பங்களாவையும் அதிலிருக்கும் தட்டுமுட்டுச் சாமான்களையும் எனது உயிருக்குயிரான நண்பர் மில்டன் அவர்கள் அடையவேண்டியது.

அந்த மாளிகையில், இரும்புப்பெட்டி வைத்திருக்கும் பாகத்தில் உள்ள பாதாள அறையில் புதைத்து வைத்திருக்கும் லட்சம் மார்க்குகளையும், இவ்வருடத்தில் ரசாயனக்கலையில் முதன்மையாக எவ்விந்திய னொருவன் வெற்றிபெறுகின்றானோ அவன் அடையவேண்டியது. இந்த உயிலுக்கு எனது ஆப்த நண்பர் மில்டன் அவர்களையே எக்ஸிகியூட்டராக நியமித்துள்ளேன். இப்படிக்கு,

தனபால முதலியார்.

சாக்ஷிகள்.

1. ஜான் பொன்னையா. 2. வாஷிங்டன்.

இதனைக்கேட்ட கமலகாந்தன் அடியற்ற நெடுமரம்போல் தரையின்மீது வீழ்ந்து மூர்ச்சித்தான். ஒன்றும் விளங்காத மில்டன் பிரபு திகில்கொண்டு, இவ்விதமான அதிர்ஷ்ட சம்பவத்தினிடையில் அவ்வாலிபன் இங்ஙிலையை யடையக் காரணமென்னவென்று அறிய வியலாது தத்தளித்து அவ்வாலிபனை மூர்ச்சை தெளிவித்து, 'மாணவ! நீ இவ்வாறு மூர்ச்சையடைய வேண்டிய காரணம் என்ன ?' என்று கேட்டார்.

'பிரபுவே! அந்தத் தனபால முதலியார் எனது தந்தையே. அவரின் செல்வத்தை நான் அடையும் பாக்கியங்கொண்டே னுயினும் அவரை உயிருடன் காணும் பாக்கியத்தைப் பெற்றிலேன். ஐயோ! நான் ஒரு துரதிர்ஷ்டசாலியே! நான் எனது தாய் நாட்டிற்குச் சென்றாலும் என் தாயிடம் எனது தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கூற என் மனம் எவ்வாறு துணியும்? அந்தோ! நான் இனி என் செய்வேன்! தெய்வமே' என்று கண்கலங்கினுன்.

மில்டன் பிரபு இச்செய்தியை யுணர்ந்து மிகவும் பரிதபித்து தனது ஆப்த நண்பரின் அருமைக் குமாரனுன கமலகாந்தனுக்கு தேறுதல் கூறி, உயிலின் கண்டபடி சொத்தை எடுத்துக் கொடுத்து, உபசாரஞ்செய்து அன்று பாரத நாட்டிற்கு புறப்படவிருந்த ஒரு கப்பலில் பயணம் செய்தனுப்புவித்தார்.

கப்பல் புறப்பட்டது. இரண்டு நாட்கள் சென்றன. மூன்றும் நாள் மாலையில் கப்பலின் மேல்தளத்தில் தன்னுடன் கலாசாலையில் கலைபயின்று தனக்கு இன்னல்கள் பலபுரிந்த ஜர்மனிய நங்கையைக் கண்டான். இவனைக் கண்ட மாதரசி அருகில் வந்து, 'அன்ப! நீங்கள் பரீக்ஷையில் வெற்றி பெற்றமைக்கு மிகவும் சந்தோஷம். நான் தங்களுக்குப் பல இடையூறுகளை அறியாமல் செய்தேனுயினும் அவையனைத்தையும் மறந்து என்னை மன்னிக்க வேண்டும். இப்பொழுது தங்கள் நாட்டிலுள்ள பெண்களுக்காக ஏற்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிக்கு டாக்டராக நான் செல்கின்றேன். அங்கு எனக்கு உற்ருர் யாருமில்லை. ஆதலால் தாங்கள் என்னைத் தங்கள் சகோதரிபோல் பாவித்து காப்பாற்ற வேண்டும்' என்ருள்.

'அம்ம! தங்களுக்கு எங்களூரில் வேலை கிடைத்ததுபற்றி மிகவும் சந்தோஷம். தங்களுக்கு எவ்வெவ்வமயங்களில் எனது உதவி வேண்டுமோ அப்பொழுதெல்லாம் எனது பூரண மனதுடன் உதவி புரிகின்றேன். அதைப்பற்றித் தங்களுக்குக் கிஞ்சிற்றும் கவலை வேண்டாம். தாங்கள் எனக்கிழைத்த தீங்குகளையெல்லாம் அன்றே மறந்துவிட்டேன். எங்கே ஒருக்கால் அத்தீங்குகளை நான் மனத்தில் கொண்டு தங்கள் பேரில் வஞ்சந் தீர்த்துக்கொள்வேனே என்று ஒரு சிறிதும் எண்ணவேண்டாம்' என்ருன். கப்பல் கரைகண்டது. அனைவரும் துறைமுகத்தில் இறங்கி தாங்கள் செல்லவேண்டிய இடங்களுக்குப் புறப்பட்டனர். கமலகாந்தனும் ஜர்மனிய மாதும் ஒரே வண்டியில் மங்களபுரியில் வந்திறங்கினர். இவர்களை வரவேற்கும் பொருட்டு ஸ்ரீ இராமநாதன் கலாசாலை காரியஸ்தர்களும் உபாத்திமார்களும், மாணவர்களும், துப்பறியும் மிஸ். சரோஜினியும் கமலகாந்தாவும், அபயாம்பிகையம்மாளும், ஸ்ரீ இராமநாதன் கலாசாலை ஆர்மோனியச் சக்கரவர்த்தினி ஞானம்பாளும் இன்னும் பலரும் குழுமியிருந்தனர்.

கமலகாந்தனையும் ஜர்மனிய மாதையும் ஒருங்கே கண்ட அங்கு கூடியுள்ளோர், கமலகாந்தன் ஒரு ஜர்மனிய மாதை மணந்து உடனழைத்து வந்துவிட்டதாக குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். இந்திய மாணவர்கள் அந்நிய தேசங்களுக்குப் படிக்கப்போய் திரும்பி வரும்பொழுது அந்நிய மாதுகளை உடனழைத்து வருவது சகஜமாகிவிட்டது என்று பேசிக்கொண்டனர். இவற்றைக் குறிப்பா லறிந்த கமலகாந்தன் அங்கு குழுமியுள்ளோர்களை நோக்கி 'அன்புடை யீர்! இந்த ஜர்மனியப் பெண் இங்குள்ள பெண்கள் வைத்திய சாலைக்கு டாக்டராக வந்துள்ளாள். இவளுக்கு நமது முழு ஆதரவை யும் அளிக்கவேண்டியது நமது கடமையாகும். இம்மாது நான் ஜர்மனியிலிருந்தபொழுது என்னைத் தனது சகோதரனுக்கும் மேலாக மதித்து நடத்திவந்தாள்' என்று வினயமாகக் கூறினன்.

கமலகாந்தனின் கழுத்து நிறைய ரோஜாமாலைகள் சூட்டப் பட்டன. எங்கும் கமலகாந்தனுக்கு 'ஜே' என்ற கோஷத் தொனி கிளம்பியது. ஸ்ரீ இராமனுதன் கலாசாலையின் பிரின்சிப்பாலான எஸ். என். சர்மா, உரத்த குரலில்,

'சகோதர சகோதரிகளே! எங்கள் கலாசாலை மாணவன் கமலகாந்தன், 'பிச்சைபுகினும் கற்கைநன்றே' என்ற வாக்கியத்திற் கிலக்காக தனது ஏழ்மை நிலையிலும் பல வழிகளிலும் பணத்தைத் திரட்டி ரசாயனக்கலையில் வெற்றிபெற்று, கீர்த்தியுடன் திரும்பியது இந்நாட்டு மக்களாகிய உங்களுக்கும், அவனுக்கும், கல்வி புகட்டிய எங்களுக்கும் மிகவும் பெருமையளிக்கக் கூடிய சம்பவமாகும். நிற்க அவன் இனி எத்துறையிலீடுபடினும் வெற்றியேயடைய எல்லாம் வல்ல கடவுளை நாம் துதி செய்ய வேண்டுவதேயல்லாது வேறென் றில்லை' என்றார்.

மறுபடியும் 'கமலகாந்தனுக்கு ஜே' என்ற சந்தோஷகோஷம் வானையும் பிளக்கும்படி கேட்டது. அங்கு கூடியிருந்தோர், ஒவ்வொருவராகப் பிரியலாயினர். இறுதியில் நுப்பறியும் மிஸ். சரோஜினியும், ஸ்ரீ இராமனுதன் கலாசாலை ஆர்மோனியச் சக்கர வர்த்தினி ஞானும்பாளும், கமலகாந்தாவும், அபயாம்பிகையம்மா ளும் எஞ்சி நின்றனர்.

கமலகாந்தனைக் கண்ணாரக் கண்ட நம் கதாநாயகி நாணிக் கோணி வெட்கித் தலைகுனிந்து கடைக்கண்ணால் நோக்கியவண்ணம் நின்றாள். மிஸ். சரோஜினி கமலகாந்தனுக்கு ஆசிகூறி அன்று மத்தி யான விருந்திற்கு கமலகாந்தனையும் ஜர்மனிய மாதையும் அழைத் தாள். பின்பு கமலகாந்தாவை நோக்கினாள். இதனைக் குறிப்பா லறிந்த கமலகாந்தா 'சரோஜினி! மன்னிக்க வேண்டும். விவாக மாகாமல், மூடப்பெற்றோர்களின் கவனத்திலுள்ள நான், விருந்தில்

கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். இப்பொழுது என் பெற்றோர்கள் எனது அதிர்ஷ்ட வசத்தால் ஊரிலில்லாததால் நான் இந்த வரவேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றேன்' என்றாள். பின்பு சரோஜினி அபயாம்பிகையம்மாளை நோக்கி, 'அம்மா! தாங்களும் விருந்தில் கலந்துகொள்ள வேண்டும்' என்றாள். 'சரோஜினி! என் மைந்தன் இவ்வூரிலிருந்து ஜர்மனிக்குப் புறப்பட்ட தினத்திலிருந்து நேற்று இரவு வரையும் எனக்கு ஆகாரம் அளித்து வேண்டிய உதவிகளை அளித்த நீ இன்று மத்தியானம் விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதை எனது மைந்தன் வந்துவிட்டதால் நான் ஒருவேளை திரஸ்கரித்து விடுவேனென எண்ணிக்கொண்டனையோ!' என்று புன்முறுவலுடன் மொழிந்தாள்.

இதுகாறும் சந்தோஷத்துடன் நின்றிருந்த கமலகாந்தனின் முகம் மாறுபட்டது. 'கோ' வென்றலறிக் கூவி யழுதான். இவ்வாறு திடீரென இவனுக்கென்ன துன்பம் நேரிட்டதென அறியவியலாமல் தத்தளித்தனர். அபயாம்பிகை அவனை மார்புறத் தழுவி 'கமல காந்தனே! நீ இவ்வாறு திடீரென விம்முறவேண்டிய காரணம் என்ன? சீக்கிரம் கூறு. என் னெஞ்சம் அறிய ஆவல் கொள்கின்றது' என்றாள்.

'அம்மா!....அம்மா! நீ....நீ விதவை! விதவை! ஐயோ! ஐயோ!' என்றலறினான்.

'அடா கண்மணி! யாதுகூறினை? நான் விதவையா? வாஸ்தவம் தானா? உன் தந்தை மடிந்தாரா? நீ அவரைக் கண்டாயா?' என்று கேட்டாள்.

'ஆ! தாயே! தந்தை,—என் தந்தை,—உன்னை விட்டுப் பிரிந்த தந்தை, என்னையும் இவ்வுலகையும் விட்டுப் பிரிந்தார். உண்மையில் பிரிந்து விட்டார்' என்றுகூறி ஜர்மனியில் அவன் தந்தை வாழ்ந்திருந்ததையும், உயில் எழுதிவைத்துவிட்டு அவர் இறந்ததையும், அதிர்ஷ்டவசத்தால் அப்பணம் அவனையே சேர்ந்ததையும் தன் தகப்பனின் ஆருயிர்த் தோழனான மில்டன், தன்னை இன்னனென அறியும் முன்னரே தன்னிடம் அன்பு காட்டிய பெருமையையும், அவருடைய கைம்மாறு வேண்டாத உதவியையும் உதாரகுணத்தையும் விஸ்தாரமாக எடுத்துரைத்தான்.

அங்கு கூடியுள்ளோர் அனைவரும் வியப்பும் திகைப்பும் கொண்டனர். மிஸ் சரோஜினி, கமலகாந்தனையும் அபயாம்பிகையம்மாளையும் துக்கசாகரத்தினின்று கரையேற்றி தனது பங்களாவிற்கு அழைத்துச் சென்றாள். உடன், கமலகாந்தா நீங்கலாக, ஏனையோரை

யும் அழைத்துச் சென்றாள். கமலகாந்தா தனது காதலனுக்கு நடாத்தப்படும் நல்விருந்தில் தான் கலந்துகொள்ள வியலாமல் தன் பெற்றோர்கள் முட்டுக்கட்டைகளாக விருப்பதை எண்ணி மனம் வருந்தி வீடுநோக்கிச் சென்றாள். மிஸ். சரோஜினி வீட்டில், விருந்து ஏக தடபுடலாய் நடைபெற்றது.

வாசகநேயர்காள்! நம் கதையில் இதுகாறும் நடைபெற்ற சம்பவங்கள் பலவித இடையூறுகள் ஏற்பட்டிருப்பினும் யாவும் கதாநாயகர்களுக்கு வெற்றியாகவே முடிந்ததுபற்றி மிகவும் சந்தோஷசாகரத்திலாழ்ந்தோம். இனி மறைந்த கைதி கதிரேசன், ஜர்மனிய மாது, ஆர்மோனியச் சக்கரவர்த்தினி ஞானம்பாள், கதாநாயகர்களுக்கேற்படும் கஷ்டநிஷ்டூரங்கள், மிஸ். சரோஜினியின் அபார சாமார்த்தியம் ஆகியவற்றை இன்னும் சில அதிகாரங்களுடன் விளக்கிக் காட்டி கதையை முடிப்போம்.

(தொடரும்)

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனுக்கவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணு தான்

தபால் செலவு அணு 2. 10 அணு ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை

இந்தியத் தேர்தல்களின் முடிவு

:o:

அசம்பிளிகளில் கட்சிகளின் நிலைமை

வரும் ஏப்ரல் மாதத்தில் புதிய அரசியல் சீர்திருத்தம் அநுஷ்டானத்திற்கு வருகிறது. அதற்கு இந்தியா முழுவதும் கடந்த ஜனவரி, பிப்பிரவரி மாதங்களில் மாகாணச் சட்டசபைகட்கு தேர்தல்கள் நடந்தன. அத்தேர்தல்களில் பல மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியே பெருந்தொகையுள்ள கட்சியாக வெற்றி பெற்றுள்ளது. அத்தேர்தல்களின் முடிவு வருமாறு:—

சென்னை அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 215.)

காங்கிரஸ்	...	...	159
ஜஸ்டிஸ்	...	...	16
ஜனநாயகக்கட்சி	...	...	1
முஸ்லீம் சங்கம்	...	...	10
முஸ்லீம் முன்னேற்றக்கட்சி...		...	1
எக்கட்சியிலும் சேராதமுஸ்லீம்கள்		...	8
ஐரோப்பியர்கள்	...	...	3
ஐரோப்பிய வியாபாரச் சங்கப்பிரதிநிதிகள்...			3
இந்திய வியாபாரச்	... ,,	...	1
தேயிலைத் தோட்டக்காரர்கள்	,,	...	1
ஆங்கிலோ—இந்தியர்கள்	...	...	2
எக்கட்சியிலும்சேராத இதரர்கள்		...	10

மற்றும் சென்னையில் மேல்சபையிலும் காங்கிரஸ் கட்சியே பெருந்தொகையுள்ள கட்சியாக இருக்கிறது. அது மேல் சபையில் 26 ஸ்தானங்களை கைப்பற்றியுள்ளது. அதற்குப் புதிய அங்கத்தினர்களை சர்க்கார் நியமிக்காதிருந்தால் அதுவே அதிலும் பெரும்பான்மைக் கட்சியாக இருக்கும். ஏனைய மாகாணங்களில் மேல் சபையில் காங்கிரஸ் கட்சி சிறுபான்மைக் கட்சியாகவே இருக்கிறது.

பம்பாய் அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 175.)

காங்கிரஸ்	...	...	88
ஜனநாயக சுயராஜ்ஜியக்கட்சி...		...	5
முஸ்லீம் சங்கம்	...	...	19
சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	11
சுயேச்சைவாதிகள் (இதில் பார்ப்பனால்லாக் கட்சியினரும் அடங்கி இருக்கின்றனர்)		...	44
ஐரோப்பியர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் ...			8

மத்தியமாகாண அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 112.)

காங்கிரஸ்	...	...	71
சுயேச்சைவாதிகள்	...	...	14
ரவ்ஷா முஸ்லீம்கள்	...	...	8
சுயேச்சை முஸ்லீம்	...	...	1
ஷாரிவ் முஸ்லீம்கள்	...	...	5
அம்பேத்கார் கட்சியினர்	....	...	4
பார்ப்பனால்லாதார்	...	...	3
இந்து மகாசபை	...	...	1
ராஜாகட்சியினர்	...	...	1
நேஷனலிஸ்டு	...	...	2
ஐரோப்பியர்	...	...	1
ஆங்கிலோ—இந்தியர்	...	...	1

ஒரிசா அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 60.)

காங்கிரஸ்	...	...	36
சுயேச்சைவாதிகள்	...	...	12
ஐக்கியகட்சி	...	...	4
நேஷனல்கட்சி	...	...	4
நியமனமெம்பர்கள்	...	...	4

வங்காள அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 250.)

காங்கிரஸ்	...	...	56
இந்து நேஷனலிஸ்டுகள்	...	...	3
,, மகாசபை	...	...	3
சுயேச்சை இந்துக்கள்	...	...	14

சுயேச்சை தாழ்ந்த வகுப்பார்		...	23
முஸ்லீம் சங்கம்	...	...	39
பிரஜா கட்சி (முஸ்லீம் கட்சி)		...	40
சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	42
ஐரோப்பியர்கள்	...	....	25
ஆங்கிலோ—இந்தியர்கள்	...	...	4
இந்திய கிறிஸ்தவர்கள்	...	...	2

ஐக்கிய மாகாண அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 228.)

காங்கிரஸ்	...	...	133
சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	29
முஸ்லீம் சங்கம்	...	...	27
தேசீய விவசாயிகள் கட்சி	...	...	18
சுயேச்சை இந்துக்கள்	...	...	9
நிலச் சுவான்தார்கள்	...	...	6
ஐரோப்பியர்கள்	...	...	3
இந்திய கிறிஸ்தவர்கள்	...	...	2
ஆங்கிலோ—இந்தியர்கள்	...	...	1

பீஹார் அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 152.)

காங்கிரஸ்	...	...	95
சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	15
முஸ்லீம் ஐக்கியகட்சி	...	...	6
ஐரோப்பியர்கள்	...	...	4
கான்ஸ்டிடியூசன்ல்கட்சி	...	...	2
ஆங்கிலோ—இந்தியர்	...	...	1
இந்திய கிறிஸ்தவர்	...	...	1
ராஜவிசுவாசக்கட்சி	...	...	1
அகாரார்கட்சி	...	...	3
எக்கட்சியிலும் சேராதவர்கள்		...	24

அசாம் அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 108.)

காங்கிரஸ் (இந்துக்கள)	...	...	35
சுயேச்சை ,,	...	...	10
ஐக்கியஜனக்கட்சி (இந்துக்கள்)		...	3
அசாம் பள்ளத்தாக்குத் தொகுதி முஸ்லீம்கள்			5
சுர்மா பள்ளத்தாக்குத் தொகுதி ,,		...	5
முஸ்லீம்சங்கம்	...	...	9
முஸ்லீம் பிரஜாகட்சி	...	...	1

சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	14
ஐரோப்பியர்கள்	...	...	9
இந்திய கிறிஸ்தவர்கள்	...	...	1
எக்கட்சியிலும்சேராத மாதர்பிரதிநிதி		...	1
தாழ்ந்த வகுப்பார்	...	...	4
மலைப்பிரதேச தாழ்ந்த வகுப்பார்		...	5
இந்தியத் தோட்டக்காரர்கள்...		...	2
தொழிலாளர்	...	...	4

பஞ்சாப் அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 175.)

ஐக்கியகட்சியினர்	...	...	99
காங்கிரஸ்	...	...	18
அகாலியர் காங்கிரஸ்கட்சி	...	...	11
கல்சா நேஷனலிஸ்டுகள்	...	...	13
இந்து தேர்தல்போர்டு கட்சியினர்		...	12
அகாரர்	...	...	2
முஸ்லீம் சங்கம்	...	...	1
இத்திஹாடிமிலாத்(முஸ்லீம்)...		...	2
காங்கிரஸ் நேஷனலிஸ்டு	...	...	1
சுயேச்சைவாதிகள்	...	...	16

எல்லைப்புற மாகாண அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 60.)

காங்கிரஸ்	...	...	19
இந்துசிக்கிய நேஷனலிஸ்டுகள்		...	7
சுயேச்சை முஸ்லீம்கள்	...	...	2
எக்கட்சியிலும் சேராத முஸ்லீம்கள்		...	21
எக்கட்சியிலும் சேராத இந்து...		...	1

சிந்துமாகாண அசெம்பிளி

(மொத்தம் மெம்பர்கள் 60.)

ஐக்கியகட்சி	...	...	12
முஸ்லீம் அரசியல்கட்சி	...	...	10
முஸ்லீம் சங்கம்	...	...	4
பலுச்சிஸ்தானிகள்	...	...	8
மேல்பாக சிந்து இந்துக்கள்	...	...	4
கீழ்பாக சிந்து இந்துக்கள்	...	...	5
காங்கிரஸ்	...	...	7
ஐரோப்பியர்கள்	...	...	3
சுயேச்சைவாதிகள் (தொழிலாளர் பிரதிநிதிகளுட்பட)			7

சிவகாமி அல்லது
தன் கற்பை காத்த காரிகை

[V. ஜெயராமன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இவ்விடத்தில் நம் கோவிந்தனைப்பற்றி சில விஷயங்களை கவனிக்கவேண்டியிருக்கிறது. நமது துப்பறிபவர் (Mesmerism, Hypnotism, Telepathy) மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம், டெலபதி என்னும் வித்தைகளை நன்றாக அறிந்தவர். இவர் இதனுடைய சக்தியால் ஒவ்வொருவருடைய மனதிலிருப்பதை அறிந்து, அவர்கள் கண்ணுக்கு அவர்கள் மனதில் இருக்கும், பொருளையோ, உருவத்தையோ தோற்றும்படிச் செய்வார். அல்லது மாறித் தோற்றும்படிச் செய்வார். இச்சக்தியால்தான் இவர் தன்னுடைய காரியங்கள் ஜெயம் பெற செய்துகொள்வார். இதனால்தான் அந்நால்வரும் சிவகாமியைப் பார்த்தும், அவர்கள் தேடிவந்த பெண் அவள் அல்லவென்று சென்று விட்டனர்.

* * *

கோவிந்தன் அவர்கள் சென்றவுடன் சிவகாமியைப் பார்த்து மீதி வரலாற்றை சொல்லும்படிக் கேட்டார்.

சிவ:—என் கலியாணத்திற்கு சகல ஏற்பாடுகளும் நடந்து கொண்டு வந்தது முகூர்த்தத்திற்கு இன்னும் ஒருவாரந்தான் இருந்தது. என் உயிரை எப்படியாவது மாய்த்துக் கொள்வதென உத்தேசித்து என் காதலருக்கு என்னை அவ்விடம் வந்து சந்திக்கும்படி கடிதம் எழுதினேன். இப்படியிருக்க என் தந்தை எனக்கு தோழியாக லீலாவதி என்னும் ஓர் பெண்ணை அமர்த்தினர். அவள் என்னிடம் மிகவும் அன்புள்ளவள்போல் பாவனைசெய்து, நான் வருத்தப்படுவதற்கு காரணம் என்னவென்றும், அப்படி ஏதாவது கஷ்டமிருந்தால், அதை நிவர்த்திக்கத் தன்னால் ஆன உதவியை செய்வதாகவும் கூறினாள். நான் அவளை நம்பி என் கஷ்டங்களையெல்லாம் கூறினேன். அவள் மிகவும் பரிதாபப்படுவதுபோல் பாசாங்கு காட்டி சற்றுநேரம் யோசித்துவிட்டு என்னை அவ்விடத்திலிருந்து வெளியேற்றி சிவசமுத்திரத்தில் தன் அண்ணன் வீட்டில்

கொண்டுபோய் வைத்து விடுவதாகவும், பிறகு என் காதலரை கண்டு பிடித்து சேர்த்து வைப்பதாகவும் கூறினாள். நானும் ஒப்புக்கொண்டேன். இருவருமாகப் புறப்பட்டு இவ்விடம் வந்தோம். எங்களுடன் வழியில் இப்பொழுது இங்கு வந்த நால்வரும் சேர்ந்துகொண்டனர். லீலாவதி என்ற பெண் என்னை வீட்டில் விட்டுவிட்டு, தான்போய் சமையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வருவதாகக் கூறிச் சென்றாள். அவளுக்குப் பதிலாக 25 வயதுடைய வாலிபன் சமையலுக்கு வேண்டிய சாமான்களை கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். மாலை 2 மணிக்கு அவ்வாலிபனே வந்து அன்னம் படைக்கும்படி கூறினான். அவ்வாறே அன்னம் படைத்தேன். அவன் சாப்பிட்டுவிட்டு என்னை சாப்பிடும்படி வேண்டினான். நான் ஒரே பிடிவாதமாக சாப்பிடாமல் இருந்தேன். அப்பொழுது அவ்வாலிபன் 'அம்மா! வருத்தப்படாமலிருங்கள். நான் கூடிய சீக்கிரம் உங்கள் காதலரை கொண்டுவந்து சேர்க்கிறேன்' என்றான். எனக்கு உடனே திகில் உண்டாய்விட்டது. நான் அவ்வாலிபனை பார்த்து நீங்கள் யார்? என்னை இவ்விடம் அழைத்து வந்தது ஓர் பெண்ணல்லவோ' என்றேன். அதற்கு அவன் தானே பெண் வேடம் தரித்து என்னை அழைத்து வந்ததாகவும், இது என்னை அவன் யஜமானர் ரங்கசாமி ஐயருக்கு மணம்செய்து கொடுக்கச் செய்த சூழ்ச்சி என்றும் கூறினான். நான் உடனே மூர்ச்சித்து விட்டேன். மூர்ச்சை தெளிந்து பார்க்க அவ்வாலிபனைக் காணோம். மறுநாள் ரங்கசாமி ஐயர் என்பவரே வந்து என் கற்பை அழிக்க முயன்றார். கடவுள் கிருபையால் என் கண்ணுக்குத் தென்பட்டகத்தியால் அவரை குத்தச் சென்றேன்.

* * *

மறுபடியும் யாரோ வரும் சப்தம் கேட்டு, சிவகாமி பீதி அடைந்தாள். கோவிந்தன் அவளை சமாதானப்படுத்தினான். உடனே அவர்களின் முன், முன்பு வந்த அந்நால்வரும் நிற்பதை கோவிந்தன் கண்டான்.

கோ:—நீங்கள் ஏன் மறுபடியும் இவ்விடம் வந்தீர்கள்?

நால்வரில் ஒருவன்:— அப்பெண்ணைப் பார்த்துப் போக வந்தோம்.

கோ:—நீங்கள்தான் முதலில் வந்தபோது, அப்பெண்ணல்லவென்று சொல்லிப்போய் விட்டீர்களே. மறுபடியும் எங்களை வந்து தொந்தரவு செய்கிறீர்களே? என் வீட்டிற்குள் உத்தரவு இல்லாமல் நுழைந்ததற்கு இப்பொழுது உங்களைப் போலீஸாரிடம் ஒப்புவிக்கப் போகிறேன்.

நா-ஒ:—ஐயா! நீங்கள் எங்களை போலீஸாரிடம் பிடித்து கொடுப்பதில் என்ன பிரயோஜனம்? உங்களிடம் இருக்கும் பெண்

நாங்கள் தேடிக்கொண்டிருக்கும் பெண்ணைப்போல் இருப்பதால், மறுமுறை பார்த்துப்போக வந்தோம்.

கோ:—'நீங்கள் அப்பெண்ணைப் பார்ப்பதற்கு முன்பு இந்த கண்ணாடிக் குழாயைப் பாருங்கள்' என்றுகூறி தன் கையிலிருந்த கண்ணாடி குழாயை காண்பித்தான்.

அதை பார்த்தவுடன் அந்நால்வரும் உருண்டு அடித்துக் கொண்டு ஓடிவிட்டனர். துப்பறியும் கோவிந்தனின் தந்திரத்தில் இதுவும் ஒன்று. தன்னுடைய வசீகரசக்தியால் அக்கண்ணாடிக் குழாயில் ஓர் சிறுத்தையின் உருவம் தோன்றும்படி செய்தார். அந்நால்வரும் சென்றவுடன் கோவிந்தன், சிவகாமியை, மற்றையச் சங்கதியை சுருக்காமல் கூறும்படிக் கேட்டார்.

சிவ:—'அந்த ரங்கசாமி ஐயர் என் அறையைச் சுற்றிலும் ஆட்களைக் காவல் வைத்துவிட்டு தன் ஊருக்குப் போய்விட்டார். பிறகு நான் எப்படி தப்பிச்செல்வதென்று யோசித்துக் கொண்டிருந்தேன். அமாவாசையன்று எப்படியாவது தப்பிச்செல்வதென்று தீர்மானித்து விட்டேன். அன்றையதினம் ஒரு காவல்காரன் சமையலுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் கொடுத்துவிட்டுச் சென்றான். நான் உடனே பூட்டின் துவாரத்தை அடைத்துவிட்டேன். இரவு காவல்காரர்கள் என் அறையைப் பூட்ட திறவுகோலை நுழைத்தனர். அது நுழையாததால் ஒரு கயிற்றால் கட்டிவிட்டுச் சென்றனர். இரவு 11 மணிக்கு நான் கயிற்றை அறுத்துவிட்டு, வெளியேவந்து, என் கால்கள் சென்ற வழியே சென்றேன். கடைசியில் காவேரியாற்றின் கரைக்குவந்து சேர்ந்தேன். மற்ற சமாச்சாரங்கள் உங்களுக்குத் தெரிந்ததே' என்றாள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, கோவிந்தனுடைய பார்வை அவள் கையில் அணிந்திருந்த மோதிரத்தின்மேல் சென்றது. அம்மோதிரத்தின் பேரில் 'N' என்ற எழுத்து இருந்தது. அதைப் பார்த்ததும் கோவிந்தனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. 'N' என்ற எழுத்தையுடைய பேரையே இவள் இதுவரையிலும் சொல்லவில்லையே. அதுவுமல்லாமல் இவள் தன் பேர் சிவகாமி என்று கூறினாள். அதனால் இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று சிவகாமியை பார்த்து 'அம்மா! நீ சொன்னதெல்லாம் சரிதான். நீ அணிந்துகொண்டிருக்கும் மோதிரம் யாருடையது?' என்றார்.

சிவகாமி:—நான் இதன் சமாச்சாரங்களை சொல்ல மறந்து விட்டேன். இது என்னுடைய காதலரால், சென்னையில், அவர் ஞாபகார்த்தமாகக் கொடுக்கப்பட்டது.

கோ:—அதில் 'N' என்று எழுதப்பட்டிருப்பதால் அவர் பெயர் என்ன?

சிவ:—அவர் பெயர் சிதம்பரத்தில் இருக்கும் எம்பெருமானின் பெயர்.

கோ:—சிதம்பரம் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் பெயர் 'நடேசர்'

சிவ:—ஆம்! அதுதான். அவர் மிகவும் அழகுடையவர், நல்ல படிப்பாளி' என்றுகூறி வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

இவள் இப்படிக் கூறியவுடன், கோவிந்தன் தன்னுடைய வசீகர சக்தியால், அவ்விடத்தில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியில், சிவகாமிக்கு அவளுடைய காதலருடைய உருவம் தோன்றும்படி செய்தார். சிவகாமியும் அடிக்கடி அக்கண்ணாடியைப் பார்த்து வந்தாள். அதனால்தான் கோவிந்தன், அவளுடைய காதலனுடைய உருவம் அக்கண்ணாடியில் தோன்றும்படி செய்தார். சிவகாமியின் கண்ணுக்கு ஓர் உருவம் அதில் தென்படவே, கோவிந்தனை கூப்பிட்டுப் பார்க்கும்படி வேண்டினாள்.

கோ:—என்ன? அக்கண்ணாடியில் என்ன இருக்கிறது?

சிவ:—என்னை தேடிவந்தவர்களில் ஒருவனுடைய உருவம் போல் இருக்கிறது.

கோ:—எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. உன்னுடைய பிரதிபிம்பத்தை தவிர வேறு ஒன்றையும் காணோம்.

சிவ:—இல்லை. அது என் காதலருடைய உருவம் அவர் உங்களைக் காட்டி என்னவோ சைகை செய்கிறார். ஐயா! தயவு செய்து வந்துபாருங்கள்.

கோ:—எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இதெல்லாம் உன்னுடைய சித்தப்பிரேமையே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

சற்றுநேரம் பொறுத்து சிவகாமி அக்கண்ணாடியைப் பார்க்க, தன் காதலருடைய உருவத்தை காணவில்லை. ஆனால் மேல் கூரையிலிருந்து சிவகாமி காதிற்குமட்டும் 'சிவகாமி! அவரை நம்பு' என்ற குரல் கேட்டது.

சிவகாமி:—ஐயா! இப்பொழுது ஓர் குரல் கேட்டதே அதை கவனித்தீர்களா?

கோவிந்தன்:—என்ன! நீ சொல்வதெல்லாம் விந்தையாக இருக்கிறது. என் செவிக்கு ஒன்றும் கேட்கவில்லையே.

சிவகாமி:—ஐயா! அது என் காதலருடைய குரல்போல் தோற்றுகிறது. அவர் உங்களை நம்பும்படிச் சொன்னார்' என்றாள். சிறிதுநேரம் கழித்து, சிவகாமி மறுபடியும் கோவிந்தனைப் பார்த்து

'ஐயா! அதோ என் காதலர் உங்களை நம்பும்படி சைகை செய்கிறார். தயவுசெய்து வந்து இக்கண்ணாடியைப் பாருங்கள்' என்றாள்.

கோவிந்தன் அக்கண்ணாடியைப் பார்த்துவிட்டு 'எனக்கு ஒன்றும் தெரியவில்லையே' என்றார். இவ்வளவும் சிவகாமி தன்னை நம்பும்படி கோவிந்தன் செய்த சூழ்ச்சிகளில் ஒன்றாகும்.

அன்றைய இரவு 10-மணிக்கு சிவகாமியை அவ்விடம்விட்டு வைப்பது தகுதியல்லவென்று ஓர் குதிரை வண்டியை அழைத்துக் கொண்டுவந்து அதில் அவளை ஏற்றித் தனக்குத் தெரிந்த ஒரு கிழவியின் வீட்டிற்கு அழைத்துச்சென்று கிழவியை கூப்பிட்டு தான் வெளியே சென்றுவரும் வரையில் சிவகாமியை காப்பாற்றும்படி கூறினான். கிழவியும் ஒப்புக்கொண்டாள். சிவகாமியும் கோவிந்தனும் குதிரை வண்டியில் செல்லும்பொழுது, ரங்கசாமி ஐயர் ஆட்களில் நால்வரில் ஒருவன் தற்செயலாக அவர்களைப் பார்த்தான். உடனே அவன் வெகு விரைவாக தன்னில்லம் சென்று தன்னுடைய சகாக்கள் மூவரையும் அழைத்துக் கொண்டுவந்து கோவிந்தனை கொன்றுவிட ஓர் தெருவில் காத்திருந்தான். சிவகாமியும் கோவிந்தனும் ஏறிச்சென்ற வண்டி காலியாக திரும்பிவந்தது. இதைக்கண்ட நால்வரும், திகைத்துப் போய்விட்டார்கள். 'சரி! ஆசாமி நம்மை ஏமாற்றி விட்டான்' என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருக்கும் ரஸ்தாவின் வழியாக போய்க்கொண்டிருந்தார்கள். கோவிந்தன் சிவகாமியை கிழவியின் வீட்டில் விட்டுவிட்டு, கால் நடையாக அவ்வழியாக வந்தார். அவர் வருவதை கண்ட நால்வரும் தங்கள் கையிலிருக்குங் கழிகளால் அவரை அடிக்க ஓங்கினர். கோவிந்தன் அந் நால்வரும் தடியை

ஓங்குவதை கண்டு, உடனே அவர்கள் கண்ணுக்கு ஓர் பதினாறு

அடி வேங்கைபோல் தோன்றும்படிச் செய்தார். அதைக்கண்ட அந்நால்வரும் தங்கள் தடிகளை வீசியெறிந்து விட்டு ஓட்டம் பிடித்தனர்.

கோவிந்தன் தனக்குள் ஓர் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, சென்னைக்குச்சென்று ரங்கசாமி ஐயரை கவனிக்க, ரயில்வே ஸ்டேஷனுக்கு சென்றார். இப்பொழுது கோவிந்தன் ஓர் எளிய பக்கிரியைப் போல் வேடம் தரித்திருந்தார். கோவிந்தன் ஸ்டேஷனை அடைந்த சில நிமிஷங்களுக்கெல்லாம், சிவகாமியைத் தேடிக்கொண்டுவந்த அந்நால்வரில் மூவர் சென்னைக்கு டிக்கட் வாங்குவதைக் கண்டார். உடனே தானும் ஓர் டிக்கட்வாங்கிக்கொண்டு, அம்மூவரும் ஏறப் போகும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருந்தார். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்ததும், அம்மூவரும் ஓர் வண்டியில் ஏறினர். பக்கிரியாகிய கோவிந்தனும் அதில் ஏறினர்.

புகைத்தொடர் வெகு வேகமாகச் செல்லத் தலைப்பட்டது. பக்கிரி அம்மூவரில் ஒருவரைப் பார்த்து 'என்னையா காலம் இப்படி ஆகுமென்று நான் நினைக்கவேயில்லை. இவ்வுலகில் நியாயம் என்பதே கிடையாது' என்றான்.

மூவரில் ஒருவன்:—ஐயா! அப்படிப்பட்ட அநியாயம் என்ன நடந்தது?

பக்கிரி:—யாரோ ஓர் வயதுசென்ற தனவந்தராம். அவர் ஒருவருடைய பெண்ணைக் கொண்டுவந்து கற்பழிக்க முயற்சித்தாராம். அப்பெண் ஓர் கத்தியின் உதவியால் அத்தனவந்தரை பயமுறுத்தி துரத்திவிட்டாளாம். அத்தனவந்தர் நான்கு ஆட்களை அவளுக்கு காவல் வைத்துவிட்டு மறுபடியும் வருவதாகக் கூறிப் போய் விட்டாராம். அப்பெண் எவ்விதமாகவோ, காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு, வெளியேறி, காவேரி ஆற்றில் விழுந்து விட்டாளாம். அவளை ஓர் ஆடவன் கரையில் கொண்டுவந்து போட்டு தன்னுணர்வு வரும்படி சைத்தியோபசாரம் செய்தானும். அப்பெண், நான் இப்பொழுது உங்களுக்குக் கூறிவந்த சமாச்சாரங்களை சொல்லிவிட்டு உயிர் விட்டாளாம். அவன் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சமாச்சாரங்களை கூறினனும். போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டேபில்களும் சென்று பார்க்க அப்பிரேதத்தைக் காணவில்லையாம். போலீஸ் இலாக்கா அதிகாரிகள், அப்பெண்ணின் தற்கொலைக்கு காரணகர்த்தர்களை கண்டுபிடிக்கத் தீவிரமாக முயற்சித்து வருகிறார்களாம்' என்றான்.

இதைக் கேட்டவுடன் அம்மூவரின் முகமும் பயத்தால் பால் போல் வெளுத்துவிட்டது. இதை பக்கிரியாகிய கோவிந்தர் கண்டு கொண்டார். அம்மூவரும் ஒருமாறு சமாளித்துக்கொண்டு,

மூ-ஓ:—என்னையா பக்கிரியே! ஓர் பெரிய தனவந்தர் இப்படிச் செய்யவேமாட்டார். ஒருவேளை அத்தனவந்தருடைய விரோதிகள் யாராகிலும் இவ்விதமான புகார் செய்திருப்பார்கள்.

பக்கிரி:—இது நிஜமாகவே நடந்ததுதான் ஐயா, ஒரு பெரிய தனவந்தர் இப்படிப்பட்ட அக்கிரமங்கள செய்தால் சிறுபிள்ளைகள் செய்யக் கேட்கவும் வேண்டுமா?

மூ-ஓ:—அது எப்படி உங்களுக்குத் தெரியும்? ஒருவேளை உங்களை பரிகாசம் செய்திருப்பார்கள்.

பக்கிரி:—இச்சமாச்சாரத்தை வேறு யாராவது கூறியிருப்பின் நான்கூட நம்பமாட்டேன். என்னுடைய சகோதரன்தான் என்னிடம் கூறினன்.

மூ-ஓ:—உம்முடைய சகோதரர் ஒருவேளை உம்முடைய எளிய ஸ்திதியை கண்டு ஏளனம் செய்திருப்பார்.

பக்கிரி:—நான் என்ன எளிய ஸ்திதியிலிருந்த போதிலும், என்னுடைய சகோதரர் பொய்யே கூறுர். அப்படி அவர் என்னிடம் பொய் சொன்னதாக வைத்துக்கொண்டாலும், சிவகாமியை கரையில் கொண்டுவந்த சேர்த்த மனிதனே என் சகோதானிடம் சொல்லும்பொழுது என் காதினலேயே கேட்டேன். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

மூ-ஓ:—உம்முடைய சகோதாருக்கு என்ன உத்தியோகம்?

பக்கிரி:—என்னுடைய சகோதரர் போலீஸ் இலாகாவில் சப்-இன்ஸ்பெக்டர் வேலே பார்க்கிறுர். அவர் இந்த அக்கிரமமான செயலைச் செய்த தனவந்தரையும்: அவருக்கு உதவியாக இருந்த அந்நால்வரையும், எப்படியாவது கண்டு பிடிப்பதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறுர்' என்றுன். இதை கேட்டவுடன் அம்மூவருடைய முகமும் வெளுத்துவிட்டது.

மூ-ஓ:—அந்நால்வரையும் கண்டுபிடிக்கவே முடியாது.

பக்கிரி:—அதென்ன நீங்கள் அவ்வளவு திடமாக கூறுகிறீர்கள். ஒருவேளை அந்நால்வரில் நீங்கள் மூவரும் சேர்ந்தவர்களோ?

மூ-ஓ:—என்ன ஐயா! பக்கிரி! கொஞ்சம் கொஞ்சமாக பழியை எங்கள்மீது போடுகிறீர்? நாக்கை உள்ளேவைத்துப் பேசும். நீர் என்ன பெரிய பைத்தியக்காராய் இருக்கிறீர்?

பக்கிரி:—நீங்கள் பைத்தியக்காரர்களா அல்லது நான் பைத்தியக்காரனு என்பது இன்னும் சில நிமிடங்களில் தெரியப்போகிறது.

இப்பொழுது நீங்கள் இருக்கும் நிலைமையை கண்டால் 'பாம்பு என்று கூறியவுடன் அலறுவீர்கள்போல் இருக்கிறது' என்று கூறினான்.

மூ-ஓ:—உம்மால் என்ன செய்யமுடியும்? நீரே எங்களை வலிய சண்டைக்கு அழைத்து, எங்களைப் பயமுறுத்துகிறீர். உம்மால் ஆனதை நீர்செய்யும், என்றான்.

இதற்குள் வண்டி செங்கல்பட்டு ஜங்ஷன் வந்துநின்றது. பக்கிரி இறங்கிப், போய்விட்டான். புகைத்தொடர் புறப்படும் தருவாயில்



ஓர் வயோதிகர், அவசரமாக ஓடிவந்து, அம்மூவரிருக்கும் வண்டியில் ஏறினார். இவ்வயோதிகர், நம் துப்பறியும் கோவிந்தனே என்பதை நேயர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

(தொடரும்)

சகலமேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்காண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப்பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—1930

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

குறிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் ஒன்று மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

சகலமேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

மோட்டார் முத்தம்

[தாரை மூ. சா]

மாலை சுமார் 7-மணி இருக்கும் கதிரவன் குடதிசைக்கடலில் மறைய மறைய அந்தகாரம் ஆட்சி செலுத்தலாயிற்று. அதிக தூரத்திலிருந்து 'பும்பும்' என்ற உறுமலுடனும் அடிக்கடி 'கடலாடி பொய்யூர் ஓரான் ஓராள்' என்ற கண்டக்டர் அலறலுடனும் ஒற்றைக்கண் பேர்வழி என சொல்லுமாப்போல் ஒற்றை லைட்டுடன் கடபடா என்ற சப்தம் தொனிக்க மோட்டார் எமன் வந்துகொண்டிருந்தான். சுமார் 20 வயது மதிப்பிடத்தக்க அழகிய முஸ்லீம் வாலிபன் ஒருவன் துருக்கிக் குல்லாயுடன் விரல்களில் வைரமோதிரம் மின்ன பெரிய சீமான் வீட்டுப் புதல்வனோ என ஐயுறும்வண்ணம் நின்றுகொண்டிருந்தான். அக்கட்டழகன் கையை நீட்டி மோட்டாரை நிறுத்த 'எந்த ஊர்' என கண்டக்டர் வினவினான். 'கடலாடி' எனக் கூறிய வண்ணம் தன்னுடைய டிரங்கை எடுத்துக்கொண்டு உட்காருவதற்கு ஒவ்வொரு சீட்டாக பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் கண்டக்டர் ஒரு பக்கத்தில் இருந்தவர்களை நகர்ந்து இருக்கச் செய்துவிட்டு' இங்கே உட்காருங்கள்' என்றான். உட்கார்ந்து டிக்கட் வாங்கியவுடன் வண்டியும் நகர ஆரம்பித்தது. நெடுந்தூரம் நடந்து வந்த அலைச்சலினாலோ அல்லது சென்ற காரியம் கைகூடாததினாலோ சோர்ந்த முகத்துடன் உட்கார்ந்தவன் தூங்க ஆரம்பித்தான். அதனால் வண்டி மேடுபள்ளங்களில் செல்லும்போது உண்டாகும் அதிர்ச்சியால் ஆடிவிழுந்து கொண்டே சென்றான்.

சுமார் இரண்டுமைல் தூரம் சென்றிருக்கும். அப்பொழுது பின்புறமுள்ள சீட்டிலிருந்து ஏதோ இவனை தாக்கிற்று. விழித்துப் பார்த்தான். ஒரு யௌவன மங்கையின் லோலக் இவன் கன்னத்தில் பட்டவுடன் இவனை யறியாமல் இவனுடைய உடம்பில் ஒருவகை மின்சார சக்தி தாக்குண்டது. மெள்ள கடைக்கண்ணால் உற்றுநோக்குகையில் சுமார் 16 அல்லது 18 வயது மதிப்பிடத்தக்க ஒரு கட்டழகி வைர ஆபரணங்கள் மின்ன, கண்டோர் காமுறும் வண்ணம் வீற்றிருப்பதை பார்த்தான். பார்த்தவுடன் என்றுமில்லாத ஆனந்தமடைந்தான். மறுபடியும் இன்பத்தைப்பருக எண்ணி தூங்குபவனைப்போல் கண்ணை மூடிக்கொண்டே பின்புறம் சாய்ந்தான்.

அம்மங்கையும் சற்று கண்ணயர்ந்தபடியே சாயவே இவனுடைய கன்னம் அவளுடைய இதழுடன் சந்தித்தது. மறுகணமே மெல்லிய முத்தம் ஒன்றை ஈந்தபின் மருண்ட பார்வையுடன் சுற்றுமுற்றும் பார்த்து தன்னையாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்து கொண்டான். இருட்டிவிட்டபடியால் மங்கலான எலக்டிரிக் லைட் வெளிச்சம் அவ்வளவாக இடையூறளிக்கவில்லை. இவர்கள் இப்படி உட்கார்ந்திருந்தாலும் இவர்களுடைய கால்கள் ஒருவருக்கும் தெரியாமல் விஷமம் செய்யலாயின. சற்றுநேரம் சென்றபின் நமது வாலிபன் பின்புறமாக கையைக்கொண்டு செல்லவும் அப்பெண் மணி சட்டென்று அக்கையை பிடித்துக்கொண்டு அவன் விரலில் அணிந்துள்ள வைரமோதிரத்தை கழற்றி தன் விரலில் அணிந்து கொண்டு தன்னுடைய வைர மோதிரத்தை அவன் விரலில் அணிந்தாள். பிறகு தன்னிடமுள்ள தமிழரசு பத்திரிகையை விரித்து அதனுள் இருந்த தன்னுடைய விலாசமுள்ள ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்து மெதுவாக வாலிபனிடம் அளித்தாள். வாலிபனும் தன்னுடைய விசிட்டிங்கார்டை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்து பெண்மணியிடம் அளித்ததுதான் தாமதம், வண்டியும் கடலாடிவந்து சேர்ந்தது. கண்டக்டர் வண்டியை நிறுத்தி 'கடலாடி இறங்கு பவர்களெல்லாம் இறங்குங்கள்' என்று சப்தமிட்டான். நமது வாலி பனும் மிகவும் கஷ்டத்துடன் பிரிந்து சென்றான்.

இரவு சுமார் 12 மணி இருக்கும். காரிருள் மிகவும் பயங்கரத் தோற்றமளித்தது. கடலாடியை அடுத்த ஓர் தோப்பின் மத்தியில் ஒரு சிறியவீட்டின் ஒரு அறையில், மங்கலான விளக்குவெளிச்சத்தில், மத்தியில் போட்டிருந்த பாயின்மேல் கருத்துப் பருத்த நேகத்துடன் முறுக்கிவிடப்பட்ட மீசையுடன் இருந்த உருவம் மற்றிரு வரை நோக்கி 'எலே, எங்கிட்டு, உன் வரும்படி என்ன?'

சுப்பா, உன் வரும்படி என்ன? என்றது.

எங்கிட்டு:—எஜமான், இன்றைக்கு ஒரு வேட்டையும் அகப்பட வில்லை. ஒரே ஒரு வைர மோதிரம்தான் அகப்பட்டது.

சரி, சுப்பா உன் சமாச்சாரமென்ன?

சுப்பன்:—('ஆச்சரிய முகத்துடன்) எனக்கும் வைர மோதிரம் தான் கிடைத்தது' என்றான். மோதிரத்தை இருவரும் பார்த்தபின் ஒருவரை ஒருவர் பார்த்து,

சுப்பன்:—எலே, நீதானா பொம்பளையா வந்தது?

எங்கிட்டு:—என் அண்ணே, சாயபா வந்தது நீங்களா? அடடா.

விஜயராம் அல்லது போலிச் சாமியார்

[P. K. மேய்லானி]

சென்ற ஆண்டில் பிப்ரவரி மாதம் முதல் 'விஜயராம் அல்லது போலிச் சாமியார்' என்ற தொடர் கதை நமது சஞ்சிகையில் வெளிவந்ததும், ஆகஸ்டு மாதத்துடன் அது வெளிவராது நின்று விட்டதும் நமது நேயர்கட்கு ஞாபகமிருக்கும். ஆகஸ்டு மாதத்திற்குப்பின் அதை எழுதிவந்த நண்பரிடமிருந்து நமக்கு ஒருவிதத் தகவலும் கிடைக்கவில்லை. நாம் பன்முறை எழுதியும் பதில் கிடைக்கவில்லை. எனவே அத் தொடர் கதையை தொடர்ந்து வெளியிடமுடியாது போய்விட்டது. இப்பொழுது ஒரு நண்பர் அக்கதையைத் தொடர்ந்து எழுதி அதைப் பூர்த்தி செய்வதாய் முன்வந்துள்ளார். அதை நாம் வந்தனத்துடன் ஏற்றுப் பிரசுரிக்கிறோம்.

முன் வெளிவந்த பாகங்களின் சாரம்:—

[ஜெயராமன் என்பவன் திருச்சியில் கிளைவ் ஹாஸ்டலிலிருந்துகொண்டு படித்து வருகிறான். ஒரு நாள் அவன் திருச்சி இன்கம்டாக்ஸ் ஆபீஸர் திரு. விஸ்வநாத ஐயரின் மகள் விஜயாளை, அவள் பள்ளியிலிருந்து வீடு செல்லும் போது பார்க்கிறான். அவளும் ஜெயராமனைப் பார்த்தாள். ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்ளுகின்றனர். மறுநாள் ஜெயராமன் தனது நண்பன் அகமத்கபீருடன் நேஷனல் காலேஜில் வாலிபால் போட்டி யாட்டத்துக்குச் செல்கின்றான். ஆட்டம் முடிந்ததும் விஜயாளின் சகோதரன் நாகரத்தினத்துடன் ஜெயராமனும் கபீரும் வீடு திரும்புகின்றனர். நாகரத்தினம் தனது வீட்டின் அருகில் வந்ததும் நண்பர்கள் இருவரையும் தன் வீட்டிற்குள் வரும்படி அழைக்கிறான். அப்பொழுது அறையில் விஜயாள் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் தன் சகோதரனுடன் வேறு இருவர் வருவதை கவனித்தாள். அவர்களில் ஒருவர் தான் கண்டு காதலித்த ஜெயராமன் என்பதை அறிந்து மனமகிழ்ச்சி எய்தினாள். பின் பெண்களுக்குரிய நாணத்தினால் வீட்டிற்குள் சென்றுவிட்டாள். சென்றுவிட்டாளேனும் அவள் அங்கிருந்து ஜெயராமனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவர் கண்களும் உரையாடிக் கொண்டன. சிறிதுநேரம் சென்றதும் ஜெயராமன் தனது நண்பன் கபீருடன் புறப்பட்டுச் சென்றுவிட்டான். ஆனால் அன்றுமுதல் ஜெயராமன் தினந்தோறும் மாலையில் நாகரத்தினத்தின் அறைக்குச் சென்றுவந்தான்.

விஜயாள் ஐந்தாவது பாரத்தில் படித்து வந்தாள். அவள் கணக்கெடுத்திருந்தாள். ஜெயராமனும் கணக்கெடுத்திருப்பவன். எனவே அவள் தனக்குத் தெரியாத கணக்குகளை தன் சகோதரன்மூலம் அவனிடம் கொடுத்துப் போட்டுத் தரும்படிச் செய்வாள். சிலநாட்கள்செல்ல விஜயாள் தான் நேரிலேயே ஜெயராமனிடம் கணக்குகளை கேட்டுத் தெரிந்துகொள்ள ஆரம்பித்தாள். பின்னர் அவளது பெற்றோர்களே அவனை தினந்தோறும் வந்து அவளுக்கு கணக்குச் சொல்லிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அவனும் சம்மதித்து அவ்விதமே செய்துவந்தான். அவர்கட்கு இவர்கள் ஒருவர்மீதொருவர் காதல் கொண்டிருப்பது தெரியாது. சிற்சில சமையங்களில் எல்லோரும் உலாவச் செல்வது வழக்கம். ஒருநாள் ஜெயராமன் வந்தபோது நாகரத்தினம் அங்கில்லை. அவன் ஏதோ காரியமாய் அயலூர் சென்றிருந்தான். எனவே விஜயாள் தனது தாயாரிடம் விடைபெற்றுக்கொண்டு ஜெயராமனுடன் உலாவச்சென்றாள். இருவரும் இப்ராஹிம் பார்க்குக்குச் சென்றனர். அங்கு இருவரும் தங்கள் காதலை வெளியிட்டு சந்தோஷமாய் உரையாடி தங்கள் மோதிரங்களை காதலின் அடையாளமாக மாற்றிக்கொண்டனர்.

இஃதிவ்வாறிருக்க, விருதுநகர் பிரபல வியாபாரியான மாணிக்கம் பிள்ளையின் ஏகபுத்திரன் சுப்பிரமணியன் என்பவன் திருச்சிராப்பள்ளி நேஷனல் காலேஜில் படித்துவந்தான். அவன் விஜயாள்மீது மையல்கொண்டான். அதற்காக அவள் வீட்டிற்கு எதிரிலுள்ள வீட்டிலே ஓர் அறையில்போய் தங்கினான். விஜயாளை அடைவதற்கு அவளது சகோதரன் நாகரத்தினத்தின் 'நட்பு' இருந்தால் சுலபம் என்று எண்ணி அவனுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். ஜெயராமன் இல்லாத சமயங்களில் அவன் நாகரத்தினத்தின் அறைக்குப் போவான். ஆனால் விஜயாளோ அவனை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. அதனால் அவன், ஜெயராமன் இருக்கும் வரை அவள் தன்னை ஏறெடுத்துப் பார்க்கமாட்டாள் என்று எண்ணி அவளையும் அவனையும் பிரிக்கச் சதிசெய்தான். ஜெயராமன்மீது வீண்பழிகள் சுமத்தி நாகரத்தினத்திடம் கூறினான். அவனையும் விஜயாளையும் தனியே இருக்க அநுமதிப்பது தகாதகாரியம் என்றான். இருவரும் காதல்கொண்டு முத்தங்கள் கொடுத்துக் கொள்ளுகிறார்கள் என்றான். ஆனால் நாகரத்தினம் அவைகளை நேராய் ருசுப்பித்தாமல்லாமல், அவைகளை நம்ப மறுத்து விட்டான்.

அவன் பார்க்கில் விஜயாளும் ஜெயராமனும் தனித்திருப்பதை கவனித்து விட்டான். உடனே நாகரத்தினத்தை கூட்டிவர ஓடினான். அப்பொழுதுதான் அயலூரிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த நாகரத்தினத்தினிடம் சமாச்சாரத்தைச் சொல்லி அவனைப் பார்க்குக்கு அழைத்து வந்தான். அப்பொழுது காதலர்கள் இருவரும் முத்தங்கொடுத்துக் கொண்டிருந்தனர். அதைக்கண்ட நாகரத்தினம் ஜெயராமனைக் கடிந்து கண்டித்துவிட்டு, விஜயாளை அழைத்துக் கொண்டு ஏகினான். இந்த நிகழ்ச்சியினால் காதலர் இருவரும் அடக்கமுடியாத் துயரங் கொண்டனர். பின்னர் காதலர் இருவரும் சந்திக்க முடியவில்லை. பரீட்சை முடிந்ததும் தனது நண்பன் கபீரின்மூலம் ஜெயராமன் தனது காதல்களஞ்சியம் விஜயாளை அவளது வீட்டுப் பின்புற வாசலில் சந்தித்துப் பேசிவிட்டு தனது ஊரான தாராபுரத்துக்குச் சென்றுவிட்டான். விஜயாளை அடைய எண்ணங்கொண்ட சுப்பிரமணியனின் எண்ணங் கைகூடவில்லை.

அவனை அவனது பள்ளிநண்பர்கள் எல்லாம் ஏளனம் செய்தனர். அதனால் அவன் மானந்தாங்கமாட்டாது தனது அறையில் தூக்கிட்டுக் கொண்டான்.

தாராபுரம் சென்ற ஜெயராமன் தான் பரீட்சையில் தேறியதை அறிந்ததும் அங்கிருந்து சென்னைக்குவந்து மெடிக்கல் காலேஜில் சேர்ந்து படித்தான். அவன் அங்கிருந்து விஜயாளுக்கு, அவளது பள்ளிவிலாசத்துக்கு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். இவ்விதமாக சுமார் ஓராண்டு பறந்தோடிற்று. விஜயாளுக்கு பரீட்சைமுடிந்த அன்று ஓர்கடிதம் வந்தது. அதில் ஜெயராமன், தான் அன்று இப்பிராஹிம் பார்க்கில் இருப்பதாகவும், மாலை 6½ மணிக்கு அங்குவந்து தன்னைச் சந்திக்கும்படியாகவும் அவளுக்கு எழுதியிருந்தான். விஜயாள் அன்று நன்றாக உடையணிந்து ஆபரணங்கள் பூண்டு, தான் தனது தோழி ஒருத்தியுடன் சினிமாவிற்குச் சென்று வருவதாய் தன் தாயாரிடம் சொல்விவிட்டு இப்ராஹிம் பார்க்குக்கு வந்தாள். அவள் ஜெயராமன் இருப்பதாகக்கூறிய இடத்திற்கு அருகே வந்ததும் இருமுரடர்கள் அவளைப் பிடித்து வாயில் துணியைத் திணித்து சத்தம்போட முடியாமல் செய்தனர். விஜயாள் மூர்ச்சையாயினள்.

சினிமாவுக்குச்சென்ற விஜயாள் வீடு திரும்பி வராததைப்பார்த்து அவளது பெற்றோர்கள் அவளைத் தேடவாரம்பித்தனர். எங்கு தேடியும் காணப்படாததால் அவர்கள் போலீசாரிடம் முறையிட்டனர். மறுநாள் இப்பிராஹிம் பார்க்கில் ஒருபெண் பிரேதம் கிடந்தது. ஆனால் அது உருவே தெரியாமலிருந்தது. அதன்மேலிருந்த ஆபரணங்களெல்லாம் விஜயாளுடையதாகவே இருந்தன. ஆடையும் அவளுடையதாகவே இருந்தது. அதன் விரலில் ஜெயராமன் விஜயாளுக்குக்கொடுத்த மோதிரமிருந்தது. அருகில் 'ஜே' என்ற எழுத்துள்ள கைக்குட்டையுமிருந்தது. அதனால் இறந்தவள் விஜயாளென்றே தீர்மானித்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் விசுவநாத ஐயர் வீட்டிற்குச்சென்று விஜயாளின் அறையைச் சோதித்தார். அங்கு ஜெயராமன் எழுதிய கடிதம் கிடைத்தது. எனவே ஜெயராமனைப்பற்றிய செய்திகளை எல்லாம் நாகரத்தினத்தினிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு போய்விட்டார். ஜெயராமன் தனது ஊரில் பத்திரிகைமூலம் விஜயாளின் கொலையைப்பற்றி தெரிந்து ஆறாத்துயரத்தில் மூழ்கியிருந்தான். அப்பொழுது போலீசார் சென்று அவனை விஜயாளைக் கொன்ற குற்றத்திற்காக கைதுசெய்து திருச்சிக்கு கொண்டுவந்தனர். திருச்சி மாஜிஸ்டிரேட் விசாரணைசெய்து மறுவாரம் தீர்ப்புக்கூறுவதாய் கூறினார்.]

அத்தியாயம் 9.

கெடுமதி கண்ணுக்குத் தோற்றுமா?

நான்காவது அத்தியாயத்தின் இறுதியில் நமது சுப்பிரமணியன் படுக்கை கட்டும் கயிற்றினால் தூக்கில் மாட்டிக்கொண்டதாகசொல்லியிருக்கிறதல்லவா! இவன் நாற்காலியைக் காலால் உதைத்துத் தள்ளினதும் பாரத்தைத் தாங்க இயலாத கயிறுஅறுந்தது, (முற்பகல் செய்யின்பிற்பகல் விளையும் என்பதை இத்துஷ்டன் விஷயத்தில் நிரூபிக்க எண்ணங்கொண்டது போலும்) 'ஹே! துஷ்டா! நீ அனுபவிக்க

வேண்டியதை அனுபவிக்காமல், இறந்து தப்பித்துக்கொள்ள நினைத்தாய்; அது உன் விஷயத்தில் முடியாது' என்று சொல்வதுபோல் படபடவென்று அறுந்தது. சுப்ரமணியனும் கீழே விழுந்து மூர்ச்சையுற்றான். சிறிது நேரத்திற்குப் பிறகு மூர்ச்சை தெளிந்து எழுந்தான். கழுத்தில் இருந்த கயிற்றை எடுத்து ஒருபக்கம் எறிந்து விட்டு 'ஏதோ நல்ல காரியத்திற்காகத்தான் நம்மை கடவுள் காப்பாற்றியிருக்கவேண்டும். ஒருக்கால், விஜயாள் நமக்கே கிடைப்பாளோ' வென்று யோசித்துக்கொண்டே தன் படுக்கையை நாடினன். அவனது மனக்கண்ணில் விஜயாளின் உருவந்தோன்றவே அதைக் கட்டித்தழுவ முயன்று, பிறகு அது உருவெளித்தோற்றமென்றுணர்ந்து, 'ஆ! விஜயா!! உன்னுடன் கூடி இல்லறத்தை நடத்துவதன்றோ மோக்ஷம். ஹா! என்னே என் மடமை? என்னே என் அறிவீனம்? மகாலக்ஷ்மி போன்ற உன்னை அணையாமல் இறப்பேனே! கிழக்கிலுதிக்கும் சூரியன் மேற்கிலுதிக்கினும், யானை வாய்ப்பட்ட கரும்பு மீளினும், புலி வாய்ப்பட்ட ஆடு தப்பினும் நான் உன் கற்பை யழிக்காமல் விடேன். இது சத்தியம்' என்று பிதற்றிக் கொண்டே நித்திராதேவியின் வசமாயினன்.

பொழுதுவிடிந்து மணி 8 ஆகியும், இரவு நெடுநேரம்வரை தூக்கமின்மையால், சுப்ரமணியன் படுக்கையைவிட்டு எழுந்தானில்லை. வேலைக்காரியும் வந்து, செய்யவேண்டிய வேலைகளைப் பூர்த்தி செய்துவிட்டுப் போய்விட்டாள். பிறகு யாரோ ஒரு மனிதன் அறைக்குள் நுழைந்து சுப்ரமணியனைத் தட்டி எழுப்பினன் சுப்ரமணியன் எழுந்து தனது ஆத்ம நண்பனைக் கண்டு சந்தோஷங்கொண்டு சம்பாஷிக்கத் தொடங்கினன்.

சுப்:—நண்ப! தேடிக்கொண்டு போன தெய்வம் குறுக்கிட்டது போல் நீயே நல்ல வேளையாக வந்து சேர்ந்தாய்.

நண்:—என தாருயிர்ச் சிநேகிதனே! என்னை நாடி நீ வர வேண்டிய காரணம் யாதுளது?

சுப்:—நான் நெடுநாளாக விஜயாளைக் காதலித்து வருவதும், அவள் எனக்கு கிடைக்காததும் உனக்குத் தெரியாத விஷயமல்ல.

நண்:—ஆம் அது எனக்குத் தெரிந்ததே. அது விஷயத்தில் நான் செய்ய வேண்டியதென்ன?

சுப்:—நண்ப! அக்காரியம் உன்னாலேயே முடியவேண்டும்.

நண்:—அப்படியாயின் நான் செய்ய வேண்டியதை உடனே சொல். க்ஷணத்தில் முடித்து விடுகிறேன். என்னால் ஆகாததும் உளதா?

தனது நண்பனின் வீர மொழிகளைக் கேட்டு மனோ தைரியமடைந்து, தனது பெட்டியை திறந்து சில நோட்டுகளை

பெடுத்து அவன் கையில் கொடுத்து காதில் ஏதோ சில வார்த்தைகளை சொன்னான். நண்பனும் அவன் சொல்லியபடியே செய்வதாக உறுதி கூறிவிட்டு வெளியேறினான்.

ஆண்டார் தெரு முதலியார் சந்திற்கடுத்த தீண்டார் திருசெட்டியார் சந்தில் வசித்துவரும் கோதண்டராம பிள்ளை குமாரன் குலசேகரன் என்பவனுக்கு மாதம் 500 ரூபாய் வரும்படி வரக்கூடிய பூஸ்திதி உண்டு. கோதண்டராம பிள்ளையும் அவரது தேவியும் அவனை மிகவும் செல்வமாகவே வளர்த்து வந்தனர். குலசேகரன் பாலியத்திலேயே பள்ளிக்குப் போகாது தெருவில் திரியும் போக்கிரிப் பயல்கள் சினேகிதத்தை நாடி அவர்களது பழக்க வழக்கங்களில் தேர்ச்சி பெறலாயினன். குலசேகரனது படிப்பும் அரைகுறையாக விருக்கும்போதே அவனது பத்தாவது வயதில் அவனது தகப்பனார் இறக்கவும், தனயன் பள்ளிக்குப் போவதை அறவே நிறுத்திவிட்டு, தாயார் ஏமாறும் சமயந்தோறும் பணத்தையும் நகைகளையும் திருடிச் சென்று தனது சினேகிதர்களுடன் சேர்ந்து தாறுமாறான வழிகளில் செலவு செய்வான். 'தந்தையுடன் கல்விபோம்' என்ற பழமொழிக் கிணங்க நம் குலசேகரன் கல்வியை விடுத்து எல்லாவிதக் கெட்ட வழிகளிலும் தேர்ச்சி பெற்றான். அவனது தாயோ, தனக்கு ஒரே புதல்வனானதால் அவனைக் கண்டித்தால் எங்குச் சென்று விடுவானோ என்ற பயந்தவளாய் கண்டிக்காது விடுத்தாள் அதிர்ஷ்டவசமாக குலசேகரனது தாயார் அவனது 15-வது வயதிலேயே பரலோகப் பிராப்தி யடைந்தாள். தாயார் இறந்தது குலசேகரனுக்குக் கொண்டாட்டமாகி விட்டது. அவன் தன் சிநேகிதர்களை வீட்டுக்கு அழைத்து வருவதும், புட்டிகளை உடைப்பதும் விருந்துகள் வைப்பதும், இரவானதும் தாசி வீடுகள் நுழைவதுமான இவ்வழிகளில் தனது செல்வத்தை வாரி யிறைக்கலாயினன். 'தேடா தொழிக்கின் பாடாய் முடியும்' என்ற ஆன்றோர் வாக்கியப்படி நம் குலசேகரன் குடிக்கும் கூத்திக்கும், சிகரெட்டுக்குமாக தனது 'பாய்காட்' சிநேகிதர்களுடன் சேர்ந்துகொண்டு, தனது மூதாதைகள் சேர்த்து வைத்த சொத்துக்கள் யாவற்றையும் சில வருஷங்களில் ஒழித்துவிட்டு ஓட்டாண்டியாய் நின்று செலவு செய்யப் பணமின்றி வருந்தலாயினன். குலசேகரன் தனது சினேகிதர்களுடனேயே கூடிக்கொண்டு, அவர்களுக்குத் தான் எஜமானனாக இருந்து யார் எப்படிப்பட்ட காரியத்தை செய்யச் சொன்னாலும் பணமே பிரதானமாய்க்கொண்டு, அக்காரியங்களை அஞ்சா நெஞ்சத்துடன், துணிகரமாய் செய்து முடிப்பான்.

இப்பேர்ப்பட்ட வீரதீர சிகாமணியாகிய நமது குலசேகரனே அன்று காலை சுப்ரமணியனை நித்திரையிலிருந்து எழுப்பிய அவனது ஆப்த நண்பன். குலசேகரனும் சுப்ரமணியனும் தினந்தோறும்

சந்திப்பதும் பிரிவதுமாயிருந்தனர். 24-ந் தேதி காலை எழுந்தவுடன் சுப்ரமணியன், ஜெயராமனே விஜயாளுக்கு மதராஸ் மெடிகல் காலேஜி லிருந்து எழுதினதுபோல் கடிதம் எழுதி கவரில் போட்டு ஒட்டி தபாலில் போட்டுவிட்டான்.

சுப்ரமணியன் அறையில் வேலை செய்யும் பெண்ணுக்கு வயது சுமார் 18 இருக்கும். அவள் சுமாரான அழகோடு எளிய குடும் பத்தில் பிறந்தவள். அவளது தகப்பன் காலமாகிவிடவே, அவள் தனது தாயாராகிய கிழவியுடன் ஓர் எளிய வீட்டில் ஒரு ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டு ஒரு அறையில் வசித்துவந்தாள். அவள் சுப்ரமணியன் அறையில் வேலை செய்துகொண்டு மாதம் ஒன்றுக்கு ரூபா 2½ வாங்கிக்கொண்டிருந்தாள். அவள் இப்படியே இன்னும் சிலரிடம் வேலைசெய்து தன் தாயை காப்பாற்றி வந்தாள். அப்பெண்ணின் பெயர் கமலம். அவள் ஏறக்குறைய தேக திடத் திலும், உயரத்திலும் விஜயாளை ஒத்திருப்பாள். அவள் மாலை வேளை யில் சுப்ரமணியன் இருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வேலை செய்துவிட்டுப் போவது வழக்கம்.

26ந் தேதி மாலை வழக்கப்படி தன் வேலைகளை முடித்துவிட்டு கமலம் சுமார் 7 மணிக்கு சுப்ரமணியன் அறையோரமாக தன் னில்லமேகிக் கொண்டிருந்தாள். இதைக் கவனித்துக்கொண்டே யிருந்த சுப்ரமணியன், போய்க்கொண்டிருந்த கமலத்தைக் கூப்பிட்டு அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து இப்ராஹீம் பார்க்கிற்குச் சென்று அங்கு தன் வரவுக்காக காத்துக்கொண்டிருக்கும் நண்பன் குலசேகரனை அழைத்து வரும்படி அனுப்பினான். எஜமானன் சொல்லை மீறி நடக்க இஷ்டமில்லாத கமலமும் அப்படியே இப்ராஹீம் பார்க்கிற்குச் சென்றாள்.

மதராஸ் மெடிகல் காலேஜில் வாசிக்கும் ஜெயராமன் எழுதினது போல், சுப்ரமணியன் எழுதிய லெட்டர் விஜயாளை அடைந்தது. நெடுநாட்களாக ஜெயராமனைக் காண இயலாது வருத்தமுற்றிருந்த விஜயாள் முகம் இந்த கடிதத்தைக் கண்டதும், சூரியனைக்கண்ட தாமரை மலர்போல் சந்தோஷத்துடன் மலர்ந்து விளங்கிற்று. அன்றுமாலை படக்காக்ஷிசாலைக்குத் தன் சிநேகிதி ராஜத்துடன் செல்வதாக தாயாரிடம் உத்திரவு பெற்று, தன் ஆருயிர்க் காதலனைக் காணப் போவதால் சந்தோஷக் கடலில் மூழ்கி, தகுந்த ஆடை யாபரணதிகளணிந்து கற்புடைய ஸ்திரீகளுக்கொப்ப தன் காற்பெரு விரலையே நோக்கியவண்ணம் இப்ராஹீம் பார்க்கை யடைந்தாள். அவள் அங்கு சென்றதும் வாயில் துணி அடைக்கப்பட்டு இரு மூடர்களால் தூக்கிச் செல்லப்பட்டாள் என்று முன் அத்தியா யத்தில் சொல்லி இருக்கிறதல்லவா? அம்மூடர்கள் நம் தீரவீர சிகாமணியாகிய குலசேகரனின் சிஷ்யர்கள். அவர்கள் விஜயாளின்

துணி, நகை, எல்லாவற்றையும் கழற்றி அவளுக்கு வேறு உடை உடுத்தினர். சுப்ரமணியனால் அனுப்பப்பட்ட வேலைக்காரப் பெண் கமலம், அங்கு வந்ததும், அவளைப் பிடித்து வாயில் துணியைத் திணித்து கத்தமுடியாமல் செய்து, அவளது உடையைக் களைந்து விட்டு விஜயாளின் உடைகளையும், நகைகளையும் அவளுக்கு அணிந்து, மயக்க மருந்தை உபயோகப்படுத்தி மூர்ச்சையுற்றதும் மடியிலிருந்த அக்கினி திராவகத்தை எடுத்து, சீலை உடைத்தெறிந்து அவள்மேல் உச்சிமுதல் உள்ளங் கால்வரை ஊற்றி அடையாளம் தெரியவொட்டாமல் செய்துவிட்டார்கள். ஜெயராமனால் விஜயாளுக்குக் கொடுக்கப்பட்ட (J) என்ற எழுத்துள்ள சில்மோதிரத்தை கமலத்தின் விரலில் மாட்ட அவர்கள் மறக்கவில்லை. (J) என்ற எழுத்துள்ள கைக்குட்டையையும் பக்கத்தில் போட்டுவிட்டு, விஜயாளை மயக்க மருந்தினால் மூர்ச்சையுறச் செய்து, சுப்ரமணியனால் அனுப்பப்பட்ட சத்தியநாதனுடைய காரில் ஏற்றினார்கள்.

மோட்டார் காரும் மதுரையை நோக்கி வெகு வேகமாக ஓடிற்று. வழியில் ஒரு காட்டைக் கடக்கும்போது, எதிரில் ஒரு பெரிய கூட்டம் தென்பட்டது. அவர்கள் யாவரும் குதிரைகள்மீது ஆரோகணித்திருந்தனர். அவர்கள் ஒரு கொள்ளைக் கூட்டத்தார்கள். கார் வருவதைக் கண்டதும் அவர்கள் கொள்ளையடிக்கும் பொருட்டு யாவரும் ஒருமித்து பாதையில் நின்று கார்போக இடங்கொடாமல்

மடக்கிவிட்டனர். காரும் நின்றது. கூட்டத்தலைவன் கையில் ரிவால்வருடன் அருகில்சென்று காரிலிருந்த யாவரையும் கீழே இறங்கும்

படி உத்திரவிட்டான். அப்படியே டிரைவரும் மற்றுமுள்ளவர்களும் ரிவால்வருக்குப் பயந்து கீழே இறங்கிவிட்டார்கள். கள்வர்களில் ஒருவன் காரைச் சோதனை செய்தான். அவன் அங்கு ஆயிரங்கோடி சந்திரர்கள் ஒன்ருய்ச் சேர்ந்து உதித்தாற்போன்ற பிரகாசத்தோடு கூடிய முகத்துடன் ஒரு யுவதி படுத்திருக்கக் கண்டான். தட்டி எழுப்பவும் எழாமையால் அவள் மூர்ச்சையுற்றிருக்கிருள் என்றுணர்ந்து அதைத் தன் தலைவனுக்கு உரைத்தனன். தலைவனும் அப்பெண்ணை எடுத்துக் கொண்டு காரை விட்டுவிடும்படி கட்டளையிட்டான். கள்வர்களும் அப்படியே பெண்ணை மூர்ச்சையுடன் எடுத்து குதிரைமீது வைத்துக் கொண்டு போய்விட்டனர். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே' என்று குலசேகரனும் அவனது சிநேகிதர்களும் வருத்தமுற்று திரும்பவும் திருச்சிவந்து சேர்ந்தனர். குலசேகரன் தன் சிநேகிதன் சுப்ரமணியன் அறையை அடைந்து நடந்த சமாச்சாரங்களைச் சொல்லிவிட்டு, சேரவேண்டிய ரூபாயை பெற்றுக்கொண்டு தன் சிநேகிதர்களுடன் குடித்து ஆனந்திக்கச் சென்றுவிட்டான். அவன் அறையைவிட்டுப் போகும்போது கமலத்தின் உடைகளடங்கிய மூட்டையை ஒருபுறம் வைத்துவிட்டு மறந்தவனாய்ச் சென்றுவிட்டான்.

இந்த எதிர்பாரா சம்பவத்தைக் கேள்வியுற்ற சுப்ரமணியன் மனேவியாகுலமடைந்து, 'ஹா! பரம்பொருளே! எனது சூழ்ச்சிகள் யாவும் பயனற்றதே. இதற்கோ நான் இச்சடலத்தை எடுத்தேன். தனதில்லத்தில் சுகமுடனிருந்த விஜயாளை பல சூழ்ச்சிகள் செய்து எடுத்துக்கொண்டுபோய் கொள்ளைக் கூட்டத்தாருக்கு கொடுக்கவா என்னை இறப்பதினின்றும் தப்பவைத்தாய்? ஹா! பாழும்கடவுளே! கமலத்திற்கு விஜயாளின் ஆடையாபரணங்களை அணியச்செய்து, அனுதியனை பெண்மீது திராவகத்தை ஊற்றிக்கொன்று அங்குக் கிடத்திவிட்டு, விஜயாள்தான் இறந்தாள் என்று பலரும் எண்ணிக் கொள்ளட்டுமென்றும், ஜெயராமன் எழுதியதைப்போல் விஜயாளை இப்ராஹீம் பார்க்கிற்கு வரச்சொல்லி நான் எழுதின லெட்டரினுலும் பிரேதத்தின் விரலிலிருக்கும் (J) என்று எழுதின சில்மோதிரத்தினுலும், கைக்குட்டையினுலும் ஜெயராமனைக் இக்கொலைக்குக் காரணமாக்கி, ஜெயராமன் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டால், விஜயாள் அவன்மேல்கொண்டிருக்கும் காதலை விடுத்து என்னை நேசித்து எனக்கு இல்லறத் துணைவியாவாள் என்று மனக்கோட்டை கட்டினேனே. யாவும் பாழாயிற்றே விஜயாளுடைய தல்லிய மனம் கொள்ளைக் கூட்டத்தாரிடையே எவ்வளவு பரிதபிக்கின்றதோ? விஜயாளை கள்வர்களிடமிருந்து தப்பவைப்பது எளிதல்லவே? ஜெயராமனையும் தூக்கிலிடுவது நிச்சயம். ஐயோ! பாவி, எல்லாவற்றிற்கும்

நானே காரணமாயிருந்தேன்' என்று சொல்லி பிரலாபித்து, மூர்ச்சித்து கீழேவிழுந்தான்.

வழக்கம்போல் மாலை 7 மணிக்கெல்லாம் வீடுதிரும்பும் கமலம் இன்னும் வரவில்லையே என்று அவளது தாயார் இரவெல்லாம் வருந்தி எப்போது பொழுதுவிடியுமோவென்று எதிர்ப்பார்த்திருந்து, பொழுது புலர்ந்ததும் கிழவி, கமலம் வேலைசெய்யும் வீடு தோறும் சென்று விசாரித்துக் கடைசியாக சுப்பிரமணியனின் அறையை அடைந்து, அவனை விளித்து 'ஐயா எனது குமாரத்தி கமலம் மாலையானதும் வீடுவருபவள், நேற்று மாலை வழக்கம்போல் வீட்டிற்கு வரக்காணோம். அவளைப்பற்றிய தகவல் உங்களுக்கு ஏதாவது தெரியுமா?' என்றாள். கிழவியைக் கண்டதும் சுப்பிரமணியன் திடுக்கிட்டான். உடனே சற்றுத்தைரியம் அடைந்து கிலேசத்தை மறைத்து, 'ஹா! அப்படியா? கமலத்தைக் காணோமா? ஏன்? எங்குச் சென்றுவிட்டாள்? அவளைப்பற்றி எனக்கொன்றும் தெரியாதே?' என்று சாமர்த்தியமாய் புகன்றான். இதைக்கேட்ட கிழவி 'அப்படியா? நான் ஓர் அனாதை இனி என்னை யார் காப்பற்றப் போகின்றார்கள்?' என்று சொல்லி கண்ணீர்விட்டாள். அதற்கு சுப்பிரமணியன் 'கிழவி பயப்படாதே! உன் மகள் சுகமுடனே திரும்பிவந்து சேருவாள். அவளென்ன சிறுகுழந்தையா? பயப்படவேண்டாம். தினந்தோறும் வேண்டுமென்றால் இங்குவந்து சாப்பிட்டுவிட்டுப்போ' என்று கிழவிக்கு ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டான். கிழவியும் மனம் வருந்தி வீடுசேர்ந்தாள்.

கிழவியும் தன் மகள் காணமற்போனதுபற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லையே என்று மனமுடைந்து பலவாறு யோசனைசெய்து கடைசியாக ஓர் தீர்மானத்திற்கு வந்தவள்போல் எழுந்து வெளியே சென்று போலீஸ் சப்இன்ஸ்பெக்டரை அணுகி, தனக்கு நேர்ந்த விபத்தை அவரிடம் உரைத்து தன் மகளை கண்டுபிடித்து தன்னிடம் சேர்க்க வேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். சப்இன்ஸ்பெக்டரும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அவளிடமிருந்து கமலத்தின் அங்க அடையாளங்கள் அடங்கிய ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கிக்கொண்டு கிழவியை தேற்றி அனுப்பினார். கிழவியும் வீடுசேர்ந்து மகளின் பிரிவாற்றாமையைச் சகியாது பரிதவித்து கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு இருந்தாள்.

(தொடரும்)

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை நிஜுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

மானிலமீது மாண்புமிக்க மாசிலா திலக, சென்னை 6-11-1935.

எனது மனமார்ந்த வந்தனம் தங்களுக்கு உரியதாகுக.

நிற்க, எனக்கு விவாகமாகி 9 வருட காலமாயும் இதுவரையில் என் மனைவிக்கு குழந்தை உற்பவித்தி யாகாதபடியினால், ஆங்கில, யூனானி, தமிழ் வைத்தியர்களிடமெல்லாம் எவ்வளவோ மருந்துகள் வாங்கிக் கொடுத்தும் பார்த்தேன் ஒன்றும் பலனில்லை. கடைசியில் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் காண்பித்ததில் வயிற்றை ஆப்ரேஷன் செய்து கெர்ப்பப் பையை சரிப்படுத்தினால் தான் குழந்தை பிறக்குமென்பதாக சொல்லி விட்டார்கள். அதன் பின்னர் வைத்திய ஆசிரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடமெல்லாம் மருந்து வாங்கிக் கொடுத்தேன். அவைகளிலும் ஒன்றும் சுகமேயில்லை. என் மாமியார் வீட்டாரும் எவ்வளவோ மந்திர தந்திரங்களெல்லாம் செய்து பார்த்தார்கள். இவைகளிலெல்லாம் வீண் கஷ்ட நஷ்டங்களும் உண்டாயினவே ஒழிய பலன் ஒன்றையும் காணோம். முடிவாக தங்களிடம் என் மனைவியை நேரில் அழைத்துக்கொண்டு வந்து காண்பித்ததின் பேரில் தாங்கள் என் மனைவிக்குமட்டும், கொடுத்த பஸ்பத்தினாலும் மாத்திரைகளாலும் என் மனைவிக்கிருந்த கெர்ப்பப்பை கோளாறுகள் யாவும் நீங்கி இப்பொழுது ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அளவிலடங்கா ஆனந்தத்துடன் தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

குறிப்பு:—இந்நற்சாக்ஷியை தங்களுடைய தமிழரசு, பத்திரிகையில் பிரசுரம் செய்து வந்தால், என் போன்ற எத்தனையோ சகோதரர்கள் புத்திரனில்லையே, புத்திரனில்லையே என்றாட்டும் ஏக்கத்தை

விடுத்து நற்புத்திரபேற்றை பெற்றுனந்திப்பார்களெனும் நோக்கத்துடன் இதை தங்களிடம் விண்ணப்பத்துக் கொள்ளுகின்றேன். நீடிய ஆயுளையும் நல்ல திடத்தையும் இறைவன் தங்களுக்கு அருள் புரிவானுகவும்.

இங்ஙனம் சென்னை மாகாண சீர்திருத்த தொண்டர்களில் ஒருவரும் சென்னை தாழத்தப்பட்டார் தொண்டர்படையின் பிரசாரகருமான தங்கள் பணிவுள்ள, காசிமேடு - அ. பாலகிருஷ்ணன்.

ஆலம்பூண்டி போஸ்டு, 5—10—33.

ம—ா—ா—ஸ்ரீ மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ராமச்சந்திர சாஸ்திரி மிகவும் வணக்கத்துடன் எழுதிக் கொண்டது. நான் சுமார் 2 மாதத்துக்கு முன் தங்களிடம் 7, 8 வயது பெண் குழந்தையை அழைத்துக்கொண்டு நடேச சாஸ்திரியுடன் தங்களிடம் வந்து பார்த்தேன். அந்த குழந்தையை கைபார்த்து கன்வெல்ஷன் வியாதியாக இருக்கிறதென்று சொன்னீர்கள் அதற்கு இன்பசாரம் என்னும் 30 மாத்திரைகள் அடங்கிய ஒரு பாட்டல் வாங்கி வந்து தாங்கள் சொல்லியபடி மாலையில் ஒரு வேளை அரை மாத்திரை வீதம் கொடுத்து வந்ததில் 60 நாள்கள் சாப்பிட்டு வந்ததில் சாப்பிட ஆரம்பித்தது முதலாக நாளடவில் பசியுடன் சாப்பிட்டு சரியான ஜீரணசக்தியும் தேக ஆரோக்கியமும் ரத்தவிருத்தியும் ஏற்பட்டு உங்களுடைய தயவினுல் வியாதி குணமாக தெரிகிறது. தாங்கள் சொல்லியபடி மறுபடியும் சாப்பிடுவதற்கு ஒரு பாட்டல் இன்பசாரம் என்னும் மாத்திரை வி. பி. மூலமாய் அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்பினுல் மாத்திரை கிரயம் ரூபா 5—0—0 யும் வி. பி. சார்ஜும் கட்டி பெற்றுக்கொள்ளுகிறேன். தயவு செய்து தவருமல் இந்த லெட்டர் கண்டவுடன் மறு தபாலுக்கே மாத்திரை அனுப்ப கேட்டுக் கொள்ளுகிறேன். 10—10—33 க்குள் மாத்திரையை எதிர்பார்க்கிறேன்.

எம். கே. வீரராகவய்யர்.

ஆலம்பூண்டி போஸ்டு, செஞ்சி தாலுக்கா.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினேக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தாராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே, அறையாப்புக் கட்டி இவைகளேயும் எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினுல் இரணம் ஆறிவிடும்.

விலே புட்டி 1-க்கு ரூபா 1.

குறிப்பு:—கணக்கற்ற இரணங்களும், இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இங்கு குறிப்பிடவில்லே.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னே.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணைச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் எற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

ஆர். சடகோபாச்சாரியார், பி ஏ., பி. எல். ஐகோர்ட் வக்கீல்.

டாக்டர் மே. மசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாள மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசிப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி..யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,

District Munsiff, Tanuku

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம்மருந்து காப்பாற்றி இருக்கிறது.
ஆஸ்த்மாவுக்கு அரிய ஔடதம். விலை புட்டி 1-க்கு ரூபா 10.

அநேக மருந்துகளால் தீராத நோய்களைக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது.
சளி இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar
at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.